பக்கங்கள்: 12+IV = பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 11 வியாழக்கிழமை (28-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:273

# புலிகளின் பாரீஸ் ஆலோசனைகள்

# உறுதியானவை; புதுமையானவை!

## தமிழ்ச்செல்வன் குழுவினர் சொல்ஹெய்முக்கு விவரம் தெரிவித்துவிட்டு சுவிஸ் பயணம்

பாரீஸ்,ஓகஸ்ட்28

**விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினர் பாரீஸ் நகரில் கூடி சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசித்து இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகத் தயாரித்த ஆலோசனைகள் உறுதியானவை - நம்பிக்கையானவை - புதுமையானவை என்று புலிகளின் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.**

நேற்றுமுன்தினம் ஆலோசனைகள் தயாரித்து முடிக்கப்பட்டுவிட்டன. நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், விடயம் அறியப் பாரீஸ் சென்றிருந்தார். தமிழ்ச்செல்வன் குழுவினரைச் சந்தித்துப் பேசினார். ஆலோசனைகள் பற்றி வேண்டிய விளக்கங்களைப் பெற்றுக்கொண்டார்.

தமிழ்ச்செல்வன் குழுவினர் சுவிஸில் உள்ள சில அமைப்புகள் விடுத்த அழைப்பை ஏற்று அங்கே செல்கின்றனர். பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுவிட்டு அடுத்த மாதம் 3ஆம் திகதி வன்னி திரும்புவர்.

லண்டனில் உள்ள அன்ரன் பாலசிங்கத்துடன் அவ்வப்போது தொடர்பு கொண்டு கலந்தாலோசனை நடத்தியே தமிழ்ச்செல்வன் குழுவினர் சட்ட நிபுணர்களின் உதவியுடன் புதிய ஆலோசனைகளை ஒரு வரைவாகத் தயாரித்துள்ளனர். வரைவு தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு கட்டத்திலும் தமிழ்ச்செல்வன் குழுவினர், தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடன் தொடர்புகொண்டு அவருடைய கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

தமிழ்ச்செல்வன் குழுவினர் வன்னி திரும்பியதும் புதிய ஆலோசனைகள் அடங்கிய இடைக்கால நிர்வாக வரைவை, அங்கீகாரத்துக்காக தேசியத் தலைவரிடம் சமர்ப்பிப்பர். அவர் அங்

(12ஆம் பக்கம் பார்க்க)



இடைக்கால நிர்வாக வரைவு பற்றி பாரீஸில் நடந்த விடுதலைப் புலிகளின் சட்ட வல்லுநர்கள் கூட்டத்தின் இறுதியில் நோர்வே சமாதானக் குழுவின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மும் கலந்துகொண்டார். அவர் அங்கு விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் எடுத்துக்கொண்ட படம்.

## வடக்கு-கிழக்கை பிரிக்கக் கோரி அம்பாறையில் நேற்று ஆர்ப்பாட்டம்!

### 'நுஆ' தலைவி பேரியலும் பங்குபற்றினார்

அம்பாறை,ஓக.28

அம்பாறையில் நேற்று முற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. 'கிழக்கைப் பாதுகாக்கும் அமைப்பு' என்னும் ஓர் அமைப்பினால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் பங்குபற்றினர்.

அம்பாறை பிரவுண்ஸ் சந்தியில் ஆரம்பமான ஊர்வலம் மணிக்கூட்டு கோபுரச் சந்தியைச் சென்றடைந்ததும் அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கடைகள் மூடப்பட்டிருந்தன; போக்குவரத்துக்கள் வழமைபோல் நடைபெற்றன.

பெரும்பான்மையின மக்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவில் கலந்துகொண்டனர். பல பௌத்த பிக்குகளும் பங்குபற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு முஸ்லிம் கிராமங்களிலும் பிரசாரம் செய்யப்பட்டபோதிலும் குறைந்தளவிலான முஸ்லிம் மக்களே கலந்துகொண்டனர் எனக் கூறப்பட்டது.

'வடக்கு-கிழக்கைப் பிரி; இணைந்த வடக்கு - கிழக்கைப் புலிகளிடம் வழங்காதே' என்ற கோஷங்கள் ஊர்வலத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு - முஸ்லிம் எம்.பிக்கள் பிரதமருடன் நடத்திய பேச்சில் முடிவு இல்லை

### மீண்டும் அடுத்த 8ஆம் திகதி சந்திப்பர்

முஸ்லிம்களின் பாதுகாப்புக்காகப் பிரத்தியேகமாக கிழக்கிற்கு முஸ்லிம் பொலீஸாரையோ, தமிழ்பேசும் பொலீஸாரையோ இன்றைய அரசியல் சூழ்நிலையில் சேர்த்துக்கொள்வதை எதிர்க்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம.பிக்களும், பொலீஸாரை சேர்த்தே ஆகவேண்டும்; வேறு வழியில்லை என்று விடாப்பிடியாக நிற்கும் முஸ்லிம் எம்.பிக்களும் நேற்று கூட்டாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினர்.

இருதரப்பினரும் தத்தமது நிலைப்பாடுகளைப் பிரதமருக்கு விளக்கினர். தாம் ஏன் அந்த நிலைப்பாட்டுக்கு வந்தனர் என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்தினர். எனினும், இது விடயத்தில் நேற்று முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி மீண்டும் சந்தித்துப் பேசுவது என்று அங்கு தீர்மானிக்கப்பட்டது.

**தமிழ்க் கூட்டமைப்பினர் கருத்து**

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் பரிசீலனையில் ஈடுபட்டிருக்கும் இந்த சூழ்நிலையில், கிழக்கில் பொலிஸுக்கு முஸ்லிம்களையோ தமிழர்களையோ சேர்ப்பது அர்த்தமற்றது; தீய விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

(12ஆம் பக்கம் பார்க்க))

## இடைக்கால நிர்வாக சபையை எதிர்த்து

# ஜே.வி.பியின் 3 நாள் பேரணி இன்று கொழும்பு வந்துசேரும்

கொழும்பு,ஓக.28

ஜே.வி.பி. காலியிலிருந்து கடந்த 25ஆம் திகதி ஆரம்பித்த மக்கள் பேரணி, இன்று மாலை கொழும்பை வந்தடையும். கொழும்பில் லிப்டன் சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறும்.

விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை வழங்குவதற்கும் இலங்கைப் பிரச்சினையில் வெளிநாட்டு இராணுவம் தலையிடுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. இந்தப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளது. மூன்று நாள்களுக்குத் திட்டமிடப்பட்ட இந்தப் பேரணி, நேற்று அளுத்கமையில் இருந்து பாணந்துறை வரையில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுர திஸ்ஸநாயக்க தெரிவிக்கையில்:-

விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதன் மூலம் தமிழீழத்தை வழங்க பிரதமர் அத்திவாரம் இடுகின்றார் என்று தெரிவித்தார். (ம)




அளுத்கமையிலிருந்து ஜே.வி.பியின் பேரணி நேற்று ஆரம்பமானபோது...

## இளநிலை இராணுவ அதிகாரி மர்ம மரணம்!

தென்மராட்சி,ஓக.28

சாவகச்சேரி, நுணாவில் இராணுவ முகாமில் இளநிலை அதிகாரியாகப் பணியாற்றிய ஒருவர் நேற்றுமுன்தினம் மர்மமான முறையில் மரணமாகி உள்ளார். அவர் மயங்கி வீழ்ந்து மரணமானதாகப் பொலீஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இராணுவ சார்ஜன்டான நிகார் ரணவீர (வயது-28) என்பவரே மரணமானவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸார், சாவகச்சேரி நீதிவானுக்கு நேற்று அறிக்கை சமர்ப்பித்தனா. சடலத்தை கொழும்பு சட்ட வைத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லைக் கந்தன் தீர்த்தோற்சவத்தில் நேற்றும் 54 பவுண் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஓக.28

நல்லைக் கந்தன் ஆலயத்தில் தீர்த்தோற்சவமான நேற்று சுமார் 54 பவுண் நிறையுடைய நகைகள் திருடப்பட்டுள்ளன. ஆலயத்தில் இயங்கும் தற்காலிக பொலீஸ் நிலையத்திலும் உற்சவகாலச் செயலணியிலும் இதுதொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

17 தங்கச் சங்கிலிகள் மற்றும் இரு காப்புக்கள் என்பனவே திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளன.

பெரும்பாலான திருட்டுக்கள் ஆலய தீர்த்தக் கேணியடி, வசந்த மண்டபம் போன்ற இடங்களில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. சன நெருக்கடியைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பாக இருவர் பிடிக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

தேர்த்திருவிழாவான நேற்றுமுன்தினமும் ஆலய வளாகத்தில் 35 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-ரி-86)

## மன்னார்-மடு வீதியில் மீண்டும் புத்தர் சிலை அமைக்க ஏற்பாடு

கொழும்பு,ஓக.28

மன்னார் - மடு வீதியில் புத்தர் சிலை ஒன்று அமைக்கப்படவுள்ளது. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தலைமையிலான சர்வமதகுருமார் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

மன்னார் - மடு வீதி போதிராமய விகாரை 1955ஆம் ஆண்டுக்கு முன்பே ஸ்தாபிக்கப்பட்டது. 1958, 1984 ஆகிய காலங்களில் இடம்பெற்ற கலவரங்களையடுத்து இந்த விகாரை தூர்ந்து போனது.

இப்பகுதியில் கடமையாற்றும் பொலீஸார் மற்றும் பாதுகாப்பு பிரிவினர்கள் சென்று வழிபடுவதற்கு வசதியாக விகாரையை மீண்டும் கட்டியெழுப்பத் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

மடுமாதா ஆலயம் உட்பட இப்பிரதேசத்தில் உள்ள வணக்க ஸ்தலங்களைப் புனரமைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளார்.

மடுமாதா ஆலயத்திலிருந்து ஐந்து மைல்களுக்கு முன்னால் அமைக்கப்படும் இந்த விகாரையில் புத்தர் சிலை நிறுவுவதற்கான செலவை அப்பிரதேசத்தில் பணிபுரியும் பொலீஸாரே

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வடக்கு - கிழக்கை பிரிக்க உடன் நடவடிக்கை எடுக்குக!

## பேரியல் அஷ்ரப் கோரிக்கை

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனித்தனியே பிரிக்கப்படுவதுடன் அதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படவும் வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேரியல் அஷ்ரப்.

அம்பாறையில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படுவது உடன் நிறுத்தப்படுதல்வேண்டும்.

வடக்கு-கிழக்கில் உள்ள மூவின மக்களும் ஒன்று திரண்டு ஒற்றுமையுடன் வாழவேண்டுமாயின், மூவின மக்களுக்குமான அரசியல் சமத்துவம் வழங்கப்படுதல் வேண்டும்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை. வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் இன்றும் ஆறாதவடுவாக உள்ளது.

வடக்கு - கிழக்கில் முஸ்லிம் மக்கள் நிம்மதியின்றி வாழும் நிலையே இன்றும் தொடர்கிறது.

தற்போதைய அரசின் சமாதான முன்னெடுப்புக்கள், ஆயுதப்போராட்டம் தொடராமல் இருப்பதையும் அனைத்து இன மக்களினது பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதாகவும் இருத்தல் வேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.

(எ-12)

# நீதிய சர் மார்க் பெர்னாண்டோ முன்கூட்டியே ஓய்வு பெறுகிறார்

கொழும்பு,ஓக.28

உயர் நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதியரசர்களில் ஒருவரான மார்க் பெர்னாண்டோ சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். ஓய்வுபெறுவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கையிலேயே ஓய்வுபெறும் முடிவை அவர் ஜனாதிபதிக்கு அறிவித்திருக்கிறார்.

இதன்படி எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதியுடன் அவர் ஓய்வு பெறுவார். அவரது அறிவிப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

முன்னாள் பிரதம நீதியரசர் எச்.என்.ஜீ.பெர்னாண்டோவின் புதல்வரான மார்க் பெர்னாண்டோ 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதியரசர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார்.

# முஸ்லிம் இளைஞருக்கு ஆயுதப்பயிற்சியா? அடியோடு மறுக்கிறார் ஹிஸ்புல்லாஹ் எம்.பி.

கொழும்பு,ஓக.28

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப்பயிற்சிகளில் ஈடுபடுகிறார்கள்; குறிப்பாக காத்தான்குடியில் பயிற்சி முகாம் அமைக்கப்பட்டு இளைஞர்கள் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள் என்று சில ஆங்கிலப் பத்திரிகைகளிலும் ஒலி - ஒளிபரப்பு ஊடகங்களிலும் வெளிவந்த செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின்னர், முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகளால் முஸ்லிம் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதையும் அறிவோம்.

முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் தொடர்ந்தும் அரசு அசமந்தப் போக்கை கடைப்பிடிக்குமேயானால் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நேரிடும் என்பதையே நாம் கூறிவருகிறோம்.

காத்தான்குடி பிரதேசத்தில் ஓர் ஏக்கர் காணிகூட வெறுமனே இல்லை. இந்நிலையில், காத்தான்குடி பிரதேசத்தில் பயிற்சி முகாம் அமைக்கப்பட்டுள்ளது என்பது கற்பனையில் கூட எண்ணிப்பார்க்க முடியாத விடயமாகும். காத்தான்குடி மக்கள் சகதமிழ் மக்களுடன் மிகவும் அந்நியோன்னியமாக நெருங்கி வாழ்பவர்கள்.

எனவே, இவ்வாறான செய்திகள் இனங்களுக்கிடையில் விரிசல்களை ஏற்படுத்துவதோடு, முஸ்லிம் சமூகத்தைப் பற்றி தப்பான அபிப்பிராயங்களை ஏற்படுத்திவிடும்.

- இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது.

(எ)

# மழைகாலம் நெருங்கியும் வாய்க்கால்கள் சீரில்லை

வலி.வடக்கு,ஓக.28

மழைகாலம் ஆரம்பமாகவுள்ள நிலையிலும் கூட துப்புரவு செய்யப்படாத நிலையில் பல வெள்ளக் கால்வாய்கள் காணப்படுகின்றன.

மாநகர சபை, நகரசபை மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட பல வெள்ள வாய்க்கால்கள் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன. அதே சமயம் நீர் ஓடிச்செல்லும் மதகுகளும் கூட தூர்ந்துபோயும், நீக்கப்பட்டும் உள்ளன.

இதனால், கடும் மழை தொடர்ந்து பெய்யுமானால் பல இடங்களில் குடியிருப்புப்பகுதிகளுக்குள் வெள்ளநீர் புகுந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர வேண்டியிருக்கும்.

வெள்ள நீர் வடிந்து சென்று தேங்கும் குளங்கள் பல வருடகாலமாக தூர்ந்துபோயும் அணைகள் சீர்செய்யப்படாமலும் காணப்படுகின்றன.

மழைக்கு முன்னர் வெள்ளக் வாய்க்கால்கள் மற்றும் குளங்கள் என்பவற்றை உள்ளூராட்சி அமைப்புகள், நீர்ப்பாசனத் திணைக்களம், கமத்தொழில் திணைக்களம் மற்றும் அவற்றுடன் சேர்ந்த ஏனைய திணைக்களங்களும் இணைந்து துப்புரவு செய்து சரியான முறையில் மழை நீர்வடிந்து செல்லக் கூடிய வழியினைச் செய்ய வேண்டும் என பொது மக்களும், பொது நிறுவனங்களும் எதிர்பார்க்கின்றன.

(ஓ-86-6)

## நல்லூரில் நேற்று நூற்றுக்கணக்கில் தூக்குக் காவடி

நல்லூர்க் கந்தனின் தீர்த்தத் திருவிழாவான நேற்று நூற்றுக்கும் அதிகமானோர் தூக்குக் காவடி, பறவைக் காவடி எடுத்துத் தத்தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக்கொண்டனர்.

நேற்றுக்காலை முதல் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சிறுவர்கள் முதல் இளைஞர்கள் எனப் பலரும் ஆலயத்தை நோக்கி தூக்குக் காவடி, பறவைக் காவடி எடுத்து வந்ததை அவதானிக்கமுடிந்தது.

இதேவேளை - நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கற்பூரச்சட்டி ஏந்தியும், பாற்குடம் சுமந்தும், அடிஅளித்தும் நேர்த்திக்கடனை நிறைவேற்றிக் கொண்டனர்.

# நல்லூர் தீர்த்தோற்சவ தினத்தில் இளைஞர் கோஷ்டி அட்டகாசம்!

## கேணியில் தீர்த்தம் தெளிக்க முடியாதளவுக்கு நிலைமை மோசம்

யாழ்ப்பாணம்,ஓக.28

நல்லூர் ஆலய தீர்த்தோற்சவ தினமான நேற்று ஆலயத்தின் தீர்த்தக்கேணியில் இளைஞர்களின் அட்டகாசம் எல்லை மீறியது.

இளைஞர்கவின் அட்டகாசம் இருக்கும் என்று எதிர்பார்த்து நிர்வாகத்தினர் மாற்று ஏற்பாடுகள் செய்திருந்தபோதும், இளைஞர் குழுவின் அட்டகாசத்தினால் தீர்த்தக்கேணிப் பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டது.

தீர்த்தக்கேணியில் இருந்த வழமையான தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டு மிகக் குறைந்தளவு தண்ணீரே கேணியில் இருந்தது. ஊறிவரும் மேலதிக தண்ணீரைக் குறைப்பதற்காக கேணிக்குள் சதுர வடிவிலான கிடங்கொன்று வெட்டப்பட்டு அதற்குள் குழாய் வைக்கப்பட்டிருந்தது. கரைகள் தெரியுமாறு கிடங்கு சிமெந்து பிளாற்றினால் மூடப்பட்டிருந்தது.


இதனை அவதானித்த இளைஞர் குழு தாம் வைத்திருந்த சால்வைகளில் மணல் எடுத்துவந்து கிடங்கின் கரைகளுக்குள் கொட்டியதுடன் இளநீர் கோம்பைகளையும் எடுத்துவந்து அதற்குள் போட்டனர்.

இதனை அறிந்த நிர்வாகத்தினர் அங்கு சென்று அதனைத் தடுக்க முயன்றபோது, இளைஞர் குழு அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டது. நிலைமை கட்டுமீறியதை அடுத்து நிர்வாகத்தினர் உற்சவகால சிறப்புச் செயலணியினரின் உதவியை நாடினர். அவர்கள் அங்கு வந்தபோதும் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இளைஞர் குழு தமது அட்டகாசத்தைத் தொடர்ந்த வண்ணம் இருந்தது.

முருகன் தீர்த்தமாடிய நீரைக் கேணியில் தெளிப்பதற்கு முடியாதளவுக்கு நிலைமை மோசமாக இருந்தது. இதனை அடுத்து வருடாந்தம் நடைபெறும் இந்த நிகழ்வும் கைவிடப்பட்டது. இதனால், ஆத்திரம் கொண்ட குழுவினர் கிடங்கை மூடியிருந்த கொங்கிறீற் பிளாற்றைத் தூக்கி வீசியதுடன், அடியார்கள் மீதும் தமது ஆத்திரத்தைக் காட்டினர்.

இவர்களின் இந்த மோசமான செயல்களை ஏற்றுக்கொள்ளும் பாணியில் அங்கிருந்த சிலர் சிரித்தும் கைதட்டியும் ஊக்கப்படுத்தும் அநாகரீகச் செயல்களிலும் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சில இளைஞர்கள் விடுதலைப் புலிகளால் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

(ம-10-86-ரி)





இலங்கை அரசு முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக வரைவு குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சட்ட வல்லுநர்களுடன் பரீஸில் மூன்று நாள் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். அதன் இறுதியில் நோர்வே சமாதானக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் கலந்துகொண்டு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தினார்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.28

கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவினால் நடத்தப்படும் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு வீழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இருபாலைச் சந்தி, கோப்பாயில் உள்ள நலன் காக்கும் பிரிவின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(எ)

# ஹெரோயின், போலிக் கடவுச்சீட்டுக்கள்: மூன்று இலங்கையர் சென்னையில் கைது

சென்னை,ஓக.28

ஹெரோயின் கடத்தல், போலி கடவுச்சீட்டுகள் தயாரிப்பு ஆகியவை தொடர்பாக மூன்று இலங்கையர்கள் தமிழ் நாட்டில் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஆறு கிலோ ஹெரோயினுடன் சென்னையில் கைதுசெய்யப்பட்டார்.

போதைப் பொருள் தடுப்புப் பொலீஸாருக்கு கிடைத்த ஒரு தகவலின் பேரில் அவரது பணப்பை சோதனையிடப்பட்டது.

அப்பொழுது பையின் அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டது.

போலிக் கடவுச்சீட்டுக்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த மற்றும் இரு இலங்கையரையும் சென்னைப் பொலீஸார் கைதுசெய்தனர்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் சென்னைக்கு வந்திருக்கும் இவ்விருவரும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக போலிக் கடவுச்சீட்டுக்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பது பொலீஸ் விசாரணைகளில் தெரிய வந்திருக்கிறது.

அண்ணாநகர், அம்பத்தூர் ஆகிய இடங்களில் தங்கியிருந்த இவ்விரு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டபோது பல போலிக் கடவுச்சீட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டன. (எ)

# தெல்லிப்பழை அம்மன் ஆலய கொடியேற்றம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.28

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த மஹோற்சவத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 6ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு சப்பரத்திருவிழாவும், 7ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 8ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

தீர்த்தோற்சவம் 'துர்க்கா புஷ்கரணி' தீர்த்தத் தடாகத்தில் நடைபெறும்.

மஹோற்சவ காலத்தில் வீதி ஒழுங்குகளைப் பேணவும் அடியார்களின் பிரச்சினைகளை அணுகவும் தொண்டர் அமைப்பினர் பணியில் ஈடுபடவுள்ளனர். பெண்கள் மற்றும் குழந்தைகள் எவரும் அதிக அளவில் தங்க ஆபரணங்களை அணிந்து வரவேண்டாம் எனவும் சைவத்தமிழ் பண்பாட்டுக்கு மாறாக உடைகள் அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும் நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

மஹோற்சவத்தையொட்டி வட பிராந்திய போக்குவரத்துச் சபையும் தனியார் போக்குவரத்துச் சேவையும் விசேட சேவைகளை நடத்தவுள்ளன.

(ஒ-10-86)

# குற்றச்செயல்கள் பெருக்கத்திற்கான காரணங்களை ஆராய ஆணைக்குழு

## மூன்று மாதங்களில் அறிக்கை கோருகிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஓக.28

இலங்கையில் குற்றச் செயல்கள் குறிப்பிடத்தக்க அளவில் பெருகியிருக்கின்றனவா? அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் எவை? என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று உறுப்பினர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக்கின்றார்.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.டபிள்யூ.பி.வடுகொடபிட்டிய ஆணைக் குழுவுக்குத் தலைமை வகிப்பார். இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரியான சந்திரா விக்கிரமசிங்க, முன்னாள் பொலீஸ்மா அதிபரான பிராங்டி சில்வா ஆகியோர் இக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

இலங்கையில் சட்டத்தையும் ஒழுங்கையும் முறைப்படி பேண - மேற்கொள்ள - எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எவை என்பதை சிபார்சு செய்யுமாறும் ஆணைக்குழு கோரப்பட்டிருக்கின்றது.

அறிக்கையை மூன்று மாதங்களில் சமர்ப்பிக்கும்படி ஆணைக்குழுவை ஜனாதிபதி கோரியிருக்கின்றார்.

# 'நாஸா' அதிகாரிகளின் 'மமதை'தான் விண்கல அனர்த்தத்திற்குக் காரணம்!

## புறப்படும்போதே அதில் ஓட்டை; விசாரணையின் முடிவில் தகவல்!

அமெரிக்காவின் கொலம்பியா விண்கலம் பூமிக்குத் திரும்பும்போது - தரையிறங்குவதற்கு 16 செக்கன்கள் இருந்த நிலையில் - வெடித்துச் சிதறி துகள்களானது. இந்த அனர்த்தம் குறித்து விசாரணை நடத்த அமைக்கப்பட்ட குழு, விசாரணை முடிவுகளை வெளியிட்டிருக்கிறது. அதில், 'நாஸா' அதிகாரிகள் மீது கடுமையான கண்டனங்களும், விமர்சனங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஏழு விண்வெளி வீரர்களுடன் கடந்த பெப்ரவரியில் வெடித்துச் சிதறி துகள்களான கொலம்பிய விண்கலம் குறித்த அதிகாரபூர்வ விசாரணையின் முடிவு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டிருக்கிறது.

'நாஸா' நிர்வாகிகளை அந்த முடிவு மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறது. அந்தக் கொடிய விபத்துக்கு தொழில்நுட்பக் கோளாறு எந்தளவுக்குக் காரணமோ, அதேயளவுக்கு 'நாஸா' நிர்வாகிகளின் நிர்வாகமும் காரணம என்று அந்த அறிக்கை கடுமையாகச் சாடியிருக்கிறது.

'நாஸா'வின் நிர்வாகக் கலாசாரத்திலே ஓட்டைகள் இருக்கின்றன என்று அந்த விசாரணை முடிவு கூறுகிறது.

கடந்த பெப்ரவரியில் கல்பனா சாவ்லா உட்பட ஏழு விண்வெளி வீரர்களுடன் பூமிக்குத் திரும்பிக்கொண்டிருந்த கொலம்பிய விண்கலம், வெடித்துச் சிதறியதில் அவர்கள் ஏழு பேருமே கொல்லப்பட்டார்கள்.

அதற்குக் காரணம்,. அந்த விண்கலம் பூமியில் இருந்து புறப்பட்ட சமயத்திலே, அதன் வெளி எண்ணெய் தாங்கிப் பகுதியில் இருந்து விழுந்திருந்த ஒரு சிறியதுண்டு, விண்ணில் வலம்வரும் விண்கலத்தின் இறக்கையிலேயே அடித்துக் காயமேற்படுத்தியிருந்ததுதான்.

அந்தக் காயத்தினால், ஆறு அங்குல ஓட்டை விண்கலத்தில் ஏற்பட்டிருந்தது. இரண்டு வாரங்கள் கழித்து அந்த விண்கலம் பூமிக்குத் திரும்ப ஆரம்பித்த சமயத்திலே, அதியுயர் வெப்ப நிலையில் இருக்கின்ற வாயுக்கள் அந்த ஓட்டையைத் துழைத்துக் கொண்டுபோய் விண்கலத்தைப் பிளவடையச் செய்திருக்கின்றன.

இந்தச் சம்பவம்தான் விண்கலம் வெடித்துச் சிதறியதற்குக் காரணம் என்று விசாரணை அறிக்கையின் முடிவில் கூறப்பட்டுள்ளது.

இப்படி வெளி எண்ணெய் தாங்கிப் பகுதியில் இருந்து சிறுதுண்டுகள் கழன்று விழுவது ஒன்றும் இது முதல் முறையல்ல. பல ஆண்டுகளாக இப்படி நடந்து வந்திருக்கிறது.

'நாஸா' நிர்வாகிகள் இது போன்ற பாதுகாப்புத் தொடர்பான விடயங்களுக்கு திறமையான அளவு முக்கியத்துவங்களை வழங்கவில்லை என நேற்றுமுன்தினம் வெளியான அறிக்கை அவர்களைக் கண்டித்திருக்கிறது.

கொலம்பியா விண்கலம் புறப்பட்ட சமயத்திலே அதற்கு ஏற்பட்ட பாதிப்பின் அளவை ஆராயவேண்டும் என்றும் -

அது வீண்ணில் இருந்த சமயமே அது அடிபட்ட இடத்தை படம்பிடித்துப் பார்த்திருக்கவேண்டும் என்றும்-

இது குறித்து மூன்று தடைவைகள் பொறியியலாளர்கள் அதிகாரிகளைக் கேட்டிருந்தார்கள் என்றும்-

அதனை நிர்வாக அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் இருந்து விட்டார்கள் என்றும் -அந்த அறிக்கை கூறுகிறது.

இப்படிப்பட்ட நாஸாவின் கலாசாரம் பற்றி 'நாஸா' வரலாற்று அறிஞரான டாக்டர் ரோஜர் லோனியஸ் கூறும்போது -

"நாஸா'வில் இருப்பவர்களுக்கு தங்களுக்கு எல்லாமே தெரியும் என்ற எண்ணம் இருக்கிறது. யாரும் வந்து தமக்கு எதுவுமே சொல்லித் தரத் தேவையில்லை என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. எல்லாத் தகவல்களும், எல்லாத் திறமைகளும் எங்களிடம் இருக்கின்றனவே. எனவே, வெளியில் இருந்து மேலதிக ஆலோசனைகள் ஒன்றும் எமக்கு அவசியமில்லை என்று கூறும் 'மமதை' நாஸாவில் நிலவியது" - என்றார்.

அதை மாற்றுவதற்கு நாங்கள் பல பரிந்துரைகளை இந்த விசாரணைக் குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்திருக்கிறோம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அப்படி இந்த விசாரணைக் குழு பரிந்துரை செய்திருக்கின்ற விடயங்களுள் ஒன்று எதிர்காலத்தில் 'நாஸா' விண்கலங்களை விண்வெளிக்கு அனுப்பும்போது அதை மேற்பார்வை செய்வதற்கு முற்றிலும் தனிப்பட்ட ஒரு குழு பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆராய வேண்டும் என்பது.

மற்றது - விண்வெளி வீரர்கள் இனிமேல் விண்கலத்தை, அது விண்வெளியில் வலம் வந்துகொண்டிருக்கும் சமயத்திலே பழுதுபார்த்துக் கொள்வதற்கும், அதனுடைய பாதுகாப்பு நிலைமைகளை அவ்வப்போது பரிசீலனை செய்துகொள்வதற்கு வசதிகளும் வாய்ப்புக்களும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படவேண்டும்.

இநத இரண்டு விடயங்களும் முக்கியமாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று இந்த அறிக்கையில் கண்டனங்களும், பரிந்துரைகளும், விமர்சனங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

'நாஸா', இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் தான் ஏற்றுக்கொள்வதாகவும் அவற்றை நடைமுறைப் படுத்த தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறது.

அடுத்த வருடம் மார்ச் மாதம் அளவில், மீண்டும் தன்னுடைய விண்வெளிப் பயணங்கள் ஆரம்பமாகும் என்று எதிர்பார்ப்பதாகவும் 'நாஸா' கூறியிருக்கிறது.



கொலம்பியா விண்வெளி ஓடம் வெடித்துச் சிதறியதில் உயிரிழந்த விண்வெளி வீர, வீராங்கனைகள் விண்ணுக்குச் செல்ல முன்னர்....

## போர்நிறுத்த ஒப்பந்தம் நேபாளத்தில் முறிந்தது

நேபாளத்தில் கடந்த 7 மாதங்களாக நீடித்து வந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை உடனடியாக முறித்துக்கொள்வதாக மாவோயிஸ்ட் தீவிர வாதிகள் அறிவித்துள்ளனர்.

இதனை அந்த அமைப்பின் தலைவர் பிரசந்தா நேற்றுத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரியில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன் பிறகு அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே 3 சுற்று அமைதிப் பேச்சு நடந்தது. கடந்த வாரம் நடந்த பேச்சில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

அரசுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே கடந்த 1996 ஆம் ஆண்டு முதல் சண்டை நடந்து வருகின்றது. இதில் 7 ஆயிரத்துக்குமேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.


நட்சத்திர தராதரத்திற்கு உயரும்
(STAR CLASS)
"யாழ் பாடி ரெசிடென்சி"
வெற்றிடங்கள்

எமது வளர்ச்சியின் நிமித்தம் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு அனுபவமுள்ள/அனுபவமற்ற யாழ். குடா வாசிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வி, அனுபவம் மற்றும் ஆற்றல்களுக்கேற்ப சம்பளம், சலுகைகள் நிச்சயிக்கப்படும்.

01) *HOUSE KEEPING - ROOM BOYS*
தங்கும் பயணிகளின் சுகாதார நலம்பேணி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய சேவை மனப்பாங்கு கொண்டவர்கள் (ஆண்/பெண் இருபாலாரும்)

02) *ACCOUNTS CLERK WITH COMPUTER LITERACY*
பகுதி கணக்கியல் பாட சித்தியுடையோராகவும் அல்லது பாடத் தொடர்புடனும் கணனி அறிவுடனும் இருக்கவேண்டும். (பெண் மட்டும்)

03) *RESTAURANT COOKS*
வட - கிழக்கு சைவ/அசைவ உணவுகள் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும். (ஆண், பெண் இருபாலாரும்)

04) *RESTAURANT BARMAN*
மதுபான/மென்பான விற்பனையில் தேர்ச்சிபெற்ற ஆண்கள்/பெண்கள்.

05. *RESTAURANT SERVICE STAFF*
உணவு பரிமாறுவதில் சிரத்தை கொண்டவர்கள். (ஆண்/பெண்) [illegible]கை *HOTEL SCHOOL* சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு சேர்க்கவும்.

பொது முகாமையாளர்,
யாழ். பாடி ரெசிடென்சி,
51C, அம்மன் வீதி, நல்லூர்.

(21926) (16-17)


## கும்பமேளா விழாவில் சனநெரிசல் 39 பேர் உயிரிழப்பு; பலர் காயம்!

இந்தியாவின் மஹாராஷ்டிரா மாநிலம் கோதாவரி நதியில் நேற்று இடம்பெற்ற கும்பமேளா விழாவின் போது நெரிசலில் சிக்கி 39 பேர் உயிரிழந்தனர்; மேலும் பலர் காயமடைந்தனர்.

மும்பை நகரின் வடகிழக்கே உள்ள நாசிக் நகரில் கடந்த 30 ஆம் திகதி முதல் கும்பமேளா விழா இடம்பெற்று வருகிறது. இதில் உச்சக் கட்ட நிகழ்வான கோதாவரி புனித நதியில் நீராடும் வைபவம் நேற்று இடம்பெற்றது.

இதில் லட்சக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு புனித நதியில் நீராடினர். அப்போது ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி 39 பேர் உயிரிழந்தனர். இதில் மேலும் பலர் காயமடைந்தனர்.

இந்துக்களின் புராணங்களின்படி பாற்கடலை கடைந்து கிடைத்த அமிர்தத்தை பங்கிடுவதில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே சண்டை நடந்ததாகவும் -

அப்போது தேவாமிர்தத்தின் 4 துளிகள் பூமியில் நாசிக், உஜ்ஜயனி, ஹரித்துவார், அலகாபாத் ஆகிய 4 இடங்களில் விழுந்ததாகவும் - கூறப்படுகிறது.

இந்த 4 இடங்களிலும் 12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை கும்பமேளா விழாக்கள் வெவ்வேறு காலங்களில் கொண்டாடப்படுகிறது.

(ஓ)



இந்தியாவில் கும்பமேளா விழாவின் போது நிர்வாணமாக உடலெங்கும் வீபூதி பூசியபடி கோதாவரியில் நீராடச் செல்லும் சாமியார்கள்.

## கொள்ளைக் கும்பலின் தாக்குதலில் நைஜீரியாவில் 25 பேர் உயிரிழப்பு!

ஆயுதபாணிகளாக வந்த கொள்ளைக் கும்பல், நேற்றுமுன்தினம் இரவு இரண்டு பயணிகள் பஸ்ஸை வழிமறித்து, பயணிகளிடம் இருந்த நகை, பணம் முதலானவற்றை பறிமுதல் செய்த பின்னர் நடத்திய தாக்குதலில் இருபத்தைந்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்; 40 பேர் காயமடைந்தனர்.

முதலாவது பயணிகள் பஸ்ஸை எனுகு என்ற இடத்தில் மறித்து, திடீரென ஆயுதங்கள் சகிதம் பஸ்ஸினுள் ஏறிய கொள்ளைக் கும்பல், பயணிகளிடம் இருந்த நகை, பணம், பெறுமதிமிக்க பொருள்கள் என்பவற்றைப் பிடுங்கி எடுத்தது.

பயணிகளில் சிலர்கொள்ளையாகளை எதிர்த்ததால், அவர்களைக் கண்மூடித்தனமாக சுட்டும் வெட்டியும் கொலை செய்தனர். இச்சம்பவத்தில் பத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் இருபது பேர் காயமடைந்தனர்.

இரண்டாவது பஸ், தலைநகர் லாகோஸிலிருந்து வடக்காக 540 கி.மீ. தூரத்தில் உள்ள கருணா என்ற இடத்தில் கொள்ளையர்களிடம் சிக்கியது.

கற்களையும், மரக்குற்றிகளையும் போட்டு வீதித்தடை ஏற்படுத்திவிட்டு பயணிகள் பஸ்ஸை, கொள்ளைக் கும்பல் எதிர்பார்த்துக் காத்திருந்தது.

கொள்ளையர்கள் எதிர் பார்த்தது போல் வழக்கமாக அவ்வீதியால் வேகமாக வந்த பயணிகள் பஸ் கொள்ளையர்கள் போட்டிருந்த வீதித் தடைகளுடன் மோதி புரண்டது. இதில் 15 பேர் உயிரிழந்தனர். இருபது பேர் காயமடைந்தனர்.

### பூமியும் செவ்வாயும் நெருங்கின!

கடந்த 60 ஆயிரம் ஆண்டுகளில் பூமியும் செவ்வாய்க்கிரகமும் நெருங்கிய தூரத்தில் தற்போது உள்ளன. இந்த இருகிரகங்களுக்கும் இடையேயான தூரம் இப்போது 3கோடி 50லட்சம் மைல்களாகும். அடுத்து வரும் சில வாரங்களுக்கு வானில் இரவுநேரம் பிரகாசமான இளம் மஞ்சள் நிறத்தில் செவ்வாய்க்கிரகத்தை காணமுடியும் என்று வானியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### ஈராக்கில் 4பேர் மரணம்!

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மததிய பகுதியில் நேற்று நடந்த துப்பாக்கிச் சூட்டில் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பொலீஸாரைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் சிக்கியே இவர்கள் கொல்லப்பட்டார்கள்.

மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகளே தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### அரபாத் அவசர சந்திப்பு

காஸாவின் வடபகுதியில் இஸ்ரேலிய உலங்குவானூர்திகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டும், 20 பேர் காயமடைந்த சம்பவத்தை அடுத்தும் போராளிக் குழுக்களுடன் பலஸ்தீன அதிபர் அரபாத் அவசர சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

இஸ்ரேல், ஏவுகணைத் தாக்குதல்களை நிறுத்தினால் போராளிகளை தாம் கட்டுப்படுத்துவதாகத் தெரிவித்த பின்னரே இச்சந்திப்பை அரபாத் நடத்தினார் என்று செய்திகள் கூறுகின்றன.

அதேவேளை - பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸ் அமைச்சர்களுடனான அவசர சந்திப்பொன்றையும் நடத்தவுள்ளார்.

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-29245)



## சிங்கப்பூரில் தங்குமிட வசதி

கொழும்பு-சென்னை-சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்க, திருமணப்பதிவுசெய்து, திருமணம் செய்ய வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு, தளபாட பொருள்களோடு, சகல வசதிகளுடனான தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடுகளும், அவரவர் வசதிக்கு ஏற்பச்செய்து தரப்படும்.

விமான நிலையத்திலிருந்து இலவச வாகன வசதி.

சலுகை கட்டணத்தில் வாடகைக் கார்.

மேலதிக விவரங்களுக்கு:

**LINGAM WEDDING SERVICE**
10 Anson Road, #15-14 International Plaza,
Singapore 079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத்தொலைபேசி எண்:
அப்பு - 0065-975 14 941

(21-15-19) (12204)


## யாழ். மாநகரசபை
## மீள் கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்குறிப்பிட்ட வீதி வேலைகளுக்கான மீள்கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம்'10' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித்திகதி:- 03.09.2003 பி.ப. 3.00 மணி

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 05.09.2003 மு.ப. 10.00 மணி

மீள்கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி:- 05.09.2003 மு.ப. 10.30 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு, மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப் பட்டு, கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது இதற்கென இவ்வலுவலகத்தில் வைக் கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும். கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் தினத்தில் கேள்வி சமர்ப்பித் தவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுக மளிக்கமுடியும். இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணம் வற் உட்பட |
|---|---|---|
| 1. கொழும்புத்துறை 1ஆம் குறுக்குத்தெரு | 2,000/- | 300/- |
| 2. கொழும்புத்துறை 2ஆம் குறுக்குத்தெரு | " | " |
| 3. கொழும்புத்துறை 4ஆம் குறுக்குத்தெரு (மதகு உட்பட) | " | " |
| 4. உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை | " | " |
| 5. கொழும்புத்துறை 5ஆம் குறுக்குத்தெரு | " | " |
| 6. அருளம்பலம் லேன் | " | " |
| 7. பொன்னம்பலம் வீதி | " | " |
| 8. சின்னாலன் கண்டு வீதி | " | " |
| 9. குகன் வீதி | " | " |
| 10. முள்ளி வீதி | " | " |
| 11. ஆள்காட்டி லேன் | " | " |
| 12. அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு | " | " |
| 13. பெஸ்கி சனசமூக நிலைய ஒழுங்கை | " | " |
| 14. தேவரிக்குளம் லேன் | " | " |
| 15. சீனிவாசகம் வீதி | " | " |

*மாநகரசபை,யாழ்ப்பாணம்.*
*26.08.2003* (C/29799) (21-15-19)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம்.

## ரெலிவ்சன் இன்று மட்டு. விஜயம்

இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் தலைவர் றிட் வேட் ரெலிவ்சன் இன்று மட்டக்களப் புக்குச் செல்லவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது விடு தலைப் புலிகளின் தளபதிகள், படை அதிகாரிகள், முஸ்லிம் பிரதிநிதிகள் ஆகியோரை அவர் சந்தித்து அப்பகுதி நிலைமைகளை ஆராயவுள்ளார்.

## சிறுவர் தின போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஓக.28

அனைத்துலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மாவட்ட சிறுவர் பாதுகாப புக்குழு சகல பிரிவினருக்குமான கலாசாரப் போட்டியினை நடத்தவுள் ளது.

10வயது, 15 வயது, 18 வயதிற் குட்பட்ட பிரிவுகளுக்கு கவிதை, கட்டுரை, சிறுகதை, பேச்சு மற்றும் நாடகம் ஆகிய போட்டிகள் நடத்தப் படவுள்ளன.

இப்போட்டிகளில் பேச்சு மற்றும் நடனப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தமது விவரங்களை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாகவும் ஏனைய ஆக்கங்களை 12ஆம் திகதிக்கு முன்னதாகவும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு அறை எண் 30, போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம் எனும் முகவ ரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்பட லாம்.

போட்டியின் மேலதிக விவரங் களை பெறவிரும்புவோர் 021 222 5657 எனும் தொலைபேசி எண்ணு டன் தொடர்புகொள்ளவும். (ஒ-6)

## வீதிகள் புனரமைப்பு

வலிகாமம்தெற்கு,ஓக.28

வலிகாமம் தெற்கு பிரதேச சபை யின் நிதியில் இருந்து பல வீதிகள் இவ்வருட முடிவுக்குள் புனரமைப்புச் செய்யப்பட இருப்பதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திடற்புலம் வீதி, குட்டியபுலம் வீதி, புன்னாலைக்கட்டுவன் ஐயனார் கோவில் வீதி, கந்தரோடை தர்மலிங்கம் விவ சாய வீதி, வாதனை வீதி, சுன்னாகம தேவரானை வீதி, ஸ்ரீமுருகன் உள் ளக வீதி, ஏழாலை இலங்கையர்கோன வீதி, சுன்னாகம் கொத்தியாலடி சேமக் காலை வீதி, புட்டுணி வீதி, ஐயன்னா வீதி, சுன்னாகம் சிவபூதராயர் வீதி ஆகியவையே புனரமைப்புச் செய்யப படவுள்ளன. (ஒ-152)


**பிறைற்றின் கல்வி நிலையம்**
சங்கத்தானை - சாவகச்சேரி

**A/L DAY**

இ. நாகரிகம் - திரு.ஜோதீஸ்வரன்
இ. சமயம - திரு.செல்வரட்ணம்
தமிழ் - திரு.கருணாநிதி
அளவையியல்- திரு.S.R.J.சுதன்

ஆரம்பம்:-
30.08.03 சனி 12.00p.m.

(21887)



## கடை வாடகைக்கு

யாழ். காங்கேசன்துறை வீதி, நாவலர் வீதிச் சந்தியில் (25'x12')-3 Phase - மின்சார வசதியோடு கூடிய கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு :
இல.555, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(21890)(31-19-15)



## விற்பனைக்கு

தச்சுவேலை செய்யும் சைனா மெசின்கள் 10", 12", 14", 16" ஆகிய னவும் மின்சார ரீல்லர்கள், அலுமினிய கட்டிங் மெசின், டிசைன் சீவும் றவுட்டர்கள், ஜெனரேட்டர் கள், வெல்டிங் பிளான்ற், இவற்றிற் கான உதிரிப்பாகங்களும் வேறு வகை மின்சார சாதனங்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
கி.சுதாகரன்
இல.20, இரண்டாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி-29776) (21-15-19)


## நாட்டாரிசையில் பக்தி வேள்வி

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளர் கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில குழுவினர் இன்று (28.08.2003) நல்லைக் கந்தன் பூங்காவனத் திருவிழா வில் நாவலர் மணிமண்டபத்தில் இரவு 7.00 மணி தொடக்கம் 8.00 மணிவரை நாட்டாரிசையில் பக்திப் பாடல்களை இசைக்க உள்ளனர்.

(21899) - கழகச் செயலாளர்.

உ

## கல்வயல் பழம் தோட்டம் ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம்

மேற்படி ஆலய வருடாந்த உற்சவம் நாளை (29.08.2003) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

நண்பகல் அன்னதானமும் வழங்கப்படும்.

அடியார்கள் அனைவரும் வந்து வைரவப் பெருமானை தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டு கின்றோம்.

*–ஆலய பூசகர்.*

(C29800)(21-19-15)

## த ஹேலோ டிரஸ்ட்

தற்போதுள்ள வேலைவாய்ப்பு

**வளாக முகாமையாளர்**
(Compound Manager)

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கணனி அறிவு (Microsoft Word and Excel)
- வாகன முகாமை தொடர்பான போதிய அனுபவம் (Fleet Management)
- களஞ்சியப்படுத்தலும் கணக்கியலும் தொடர்பான அனுபவம்
- ஆங்கிலம் பேசும் திறன்
- ஆங்கிலம் எழுதும் திறன் வரவேற்கத்தக்கது
- விண்ணப்பதாரி 45 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும.

வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்யும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

உதவி அலுவலக முகாமையாளர்,
**த ஹேலோ டிரஸ்ட்,**
655, நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.

*ஊதியமும் இப்பதவி சம்பந்தமான நிபந்தனைகளும் தனிப்பட்ட ரீதியில் கலந்தாலோசிக்கப்படும்.*

(21880) (21-19-15)

## த ஹேலோ டிரஸ்ட்

தற்போதுள்ள வேலைவாய்ப்பு

**பகுதி நேர மொழிபெயர்ப்பாளர்**

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்

- சிங்களமொழி எழுதுவதற்கான விசேட தகைமை
- ஆங்கிலமொழியில் எழுதுவதற்கும் பேசுவதற்குமான தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

இவ்வேலைவாய்ப்பானது பகுதிநேர வேலை அடிப்படையிலும் அத்துடன், ஹேலோ டிரஸ்டால் பேணப்படும் இலங்கை இராணுவத் தின் கண்ணிவெடி பிரதேச அறிக்கையை மொழிபெயர்ப்பதற்கு மாகும்.

வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களில் வேலைசெய்யும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

உதவி அலுவலக முகாமையாளர்,
**த ஹேலோ டிரஸ்ட்,**
655, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

*ஊதியமும் இப்பதவி சம்பந்தமான நிபந்தனைகளும் தனிப்பட்ட ரீதியில் கலந்தாலோசிக்கப்படும்.*

(21-19-15) (21880)

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து இராசரத்தினம்

சங்கானை, ஓடக்கரை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து இராசரத்தினம் அவர்கள் (24.08.2003) ஞாயிற்றுக் கிழமை .கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2003) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சங்கானை சேச் வீதியில் உள்ள இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரச்சி மயானத்திற்கு எடுத்துச செல்லப்படும். இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜசிங்கம் (மகன்)

தேவாலய வீதி. சங்கானை. (21898) (26-21-15-19)

உதயன்

## வடக்கு கிழக்கு அபிவிருத்தி எப்போது?

போர் நிறுத்தத்தால் அதிக பயன் அடைபவர்கள் யார்? தென்னிலங்கை மக்கள்தான் என்கிறார் அமைச்சரவைப் பேச்சாளரான பேராசிரியர் பீரிஸ்.

போர் நிறுத்தப்பட்டும் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டும் 19 மாதங்களாகின்றன. இந்தக் கால கட்டத்தில் தென்னிலங்கையில் அரசாங்கம் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

போர் மீண்டும் வெடிக்குமானால் தொடக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகள் கூட முடங்கிப்போகும். புதியதாக எதையும் தொடங்க முடியாது. எனவே, போர் திரும்பவும் வாராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இடை நிறுததப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் விரைவிலே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றார் பேராசிரியர் பீரிஸ்.

ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நேற்றுமுன்தினம் விசேடமாக நடத்தி, கடந்த 19 மாத காலத்தில் தென்னிலங்கையிலே அரசு மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள், உருவாக்கிய வேலை வாய்ப்புக்கள் ஆகியவற்றை விளக்கினார் பேராசிரியர் பீரிஸ்.

அடுத்த இரண்டு வருடங்களில் ஆயிரத்து 700 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய தகவல்களையும் பேராசிரியர் வெளியிட்டார்.

வீதிகளை அமைத்தல், மின்சாரம் வழங்குதல், குடிதண்ணீர் வசதி செய்தல் முதலான மக்கள் நலத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்று பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு - மாத்தறை நெடுஞ்சாலை, கொழும்பு-கண்டி நெடுஞ்சாலை, கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேகப்பாதை ஆகியவை அமைக்கும் வேலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் பேராசிரியர் பீரிஸ் ஊடகவியலாளர்கள் மாநாட்டில் குறிப்பிட்டார்.

·போர் நிறுத்தத்தால் நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் வேலைகளையும் கணிசமான அளவில் செய்ய முடிந்தது என்றும் பேராசிரியர் பீரிஸ் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

இன்னும் மூன்று, நான்கு மாதங்களில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. வடக்கு - கிழக்கு மாகாண சபை எத்தனையோ வருடங்களாக இயங்கவில்லை. மற்ற ஏழு மாகாண சபைகளில் கண்டி தவிர்ந்த ஏனைய ஆறு சபைகளும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொறுப்பிலேயே இருந்து வருகின்றன.

இந்தநிலையில், தென்னிலங்கை அபிவிருத்தி பற்றிய பிரசாரம் மாகாண சபைத்தேர்தலை தேசிய ஐக்கிய முன்னணிக்கு சாதகமாக்க உதவலாம்; அது வேறு விடயம். ஆனால், கேள்வி இதுதான். அதாவது, நாட்டின் எந்தப்பகுதி உடனடியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளது?

வடக்கு - கிழக்குத்தான் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசம். அங்கே உயிரிழப்புக்களும் அழிவுகளும் அதிகம். வடக்கில் சில பகுதிகள் தரைமட்டமாகி விட்டன. மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு சென்று வாழ முடியாமல் அவதியுறுகிறார்கள். வடக்கு - கிழக்கு பொருளாதாரமும் படுத்து விட்டது.

ஆயினும், வடக்கு - கிழக்கில் இதுவரை எந்தவொரு உருப்படியான அபிவிருத்திப் பணியும் மேற்கொள்ளப்படவில்லை.

தெற்கை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் உலக நாடுகளின் உதவியுடன் வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வது என்று அரசும் விடுதலைப் புலிகளும் நடத்திய ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பக் கட்டத்திலேயே முடிவு செய்யப்பட்டது.

அபிவிருத்திப் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் இனங்கண்டு அவற்றை மேற்கொள்வதற்கு 'சிரான்' குழுவும் அமைக்கப்பட்டது. அதிலும் பேச்சுக்கள் நடந்தனவே தவிர செயல்கள் இடம்பெறவில்லை. உலக நாடுகள் வழங்கிய பணமும் சில சட்டச்சிக்கல்களை சுட்டிக்காட்டி வழங்கப்படவில்லை.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி இப்படி தடைப்படுவதைக் கண்டதும் விடுதலைப்புலிகள் வேதனை அடைந்தார்கள். தாமே அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள்.

காலம் கடந்து அரசு அதற்கு ஒப்புக்கொண்டு, பல இழுத்தடிப்புக்களுக்கு பின்னரே இடைக்கால நிர்வாகத்திற்கான தனது ஆலோசனைகளைப் புலிகளிடம் சமர்ப்பித்தது.

அவற்றைப் பரிசீலனை செய்த புலிகள், பாரிஸில் கூடி சட்டநிபுணர்களுடன் கலந்தாலோசித்து புதிய ஆலோசனைகளை அரசிடம் கொடுப்பதற்காக தயாரித்திருக்கிறார்கள்.

* விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்கி, அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று, தெற்கைப் போல வடக்கு - கிழக்கையும் அரசு அபிவிருத்தி செய்யப்போவதாக பேராசிரியர் பீரிஸ் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் இணக்கம் காணப்படுவதும் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதும் எப்போது? தவிரவும் வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு யார் பொறுப்பாக இருப்பார்கள்? அரசின்றா அல்லது விடுதலைப் புலிகளா? பேராசிரியர் பீரிஸ் தான் பதில் சொல்ல வேண்டும்.

# அரச ஊழியர் சம்பள உயர்வை முடக்க அரசு முயற்சிக்கிறது!

### சம்மேளனத் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.28

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுமென்ற வாக்குறுதியை அரசு மீளப்பெற முனைவதாக அரச ஊழியர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் டவ்லிங் எம்.பியதாச குற்றஞ்சாட்டியுள்ளார். சிங்களப்பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அரசின் சில பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள், அரச ஊழியர்களுக்கு நிச்சயமாக சம்பள உயர்வு வழங்கப்படுமெனத் தெரிவித்துவருகின்றனர். அதேவேளை, நிதியமைச்சராலும் மற்றும் சில அமைச்சர்களாலும் வெளியிடப்படும் கருத்துக்கள் இதற்கு முரண்பாடானவையாக அமைந்துள்ளன என்று பியதாச சுட்டிக்காட்டியுள்ளார். 'வற்' வரி மூலம் திட்டமிட்ட 2 ஆயிரம் கோடி ரூபாவை திரட்ட முடியாதநிலையில் அரசு உள்ளது. இதனைக் காரணமாகக் கொண்டு அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வுகளை வழங்காதிருக்க அரசு முனைவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் அரச மருத்துவர்களின் சம்பளத்தை நூற்றுக்கு 40 சத வீதத்தால் உயர்தத அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அரச ஊழியர்களில் சம்பள நிலைகளில் முரண்பாடுகள் உருவாகியுள்ளன என்றும் -

மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வுகளுக்குச் சமமான சம்பள உயர்வு ஒன்றினை சகல அரச ஊழியர்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனவும் - அவர் வலியுறுத்தியுள்ளார்.

## பல்கலை ஊழியர்களுக்கு பொது அமைப்புகள் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஓக.28

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஊழியர் சங்கங்கள் நடத்தி வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம், யாழ். மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கம் மற்றும் வங்கி ஊழியர் சங்கம் போன்றனவே தமது ஆதரவை வெளியிட்டுள்ளன.

நேற்று நண்பகல் யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய முன்றிலில் இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் ஒன்றுகூடலிலேயே இந்த ஆதரவு தெரிவிக்கப்பட்டது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளான சு.பரமநாதன், த.பஞ்சலிங்கம், க.குமாரசாமி மற்றும் எஸ்.சிவபாலன் ஆகியோர் கலந்துகொண்டு, கருத்துக்களைத் தெரிவித்தனர். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் குறித்த தெளிவை சமூக அமைப்புக்களிடையே உருவாக்க வேண்டிய தன் அவசியம் குறித்து அங்கு வலியுறுத்தப்பட்டது.(ஒ-9-ரி)

## அத்துமீறி மரங்கள் தறிப்பது வரணிப்பகுதியில் குறைந்தது

### கலாசாரத்தை பேணுவோர் காரணம்

வரணி,ஓக.28

வரணிப் பிரதேசத்தில் உள்ள தனியார் காணிகளில் அத்துமீறி மரங்களை வெட்டும் சமூக விரோதிகளின் செயல்கள் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களின் நடவடிக்கையால் குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றில் முட்கம்பி வேலிகளை வெட்டிச் சாய்த்துவிட்டு மரங்களை வெட்டி எடுத்துச் சென்ற சம்பவம் கடந்தவாரம் இடம்பெற்றது.

இதனையடுத்து, காணி உரிமையாளர் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் இது குறித்து முறையிட்டார். மறுநாளே அத்துமீறி அடுத்தவர் காணியில் மரம்வெட்டியவர்களை கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் பிடித்ததாகக் கூறப்படுகிறது. இச்சம்பவத்தின் பின்னர் சட்டவிரோத மரம்வெட்டிகளின் நடமாட்டம் குறைந்துள்ளதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-170)



யாழ்.பல்கலைக்கலை ஊழியர்களின் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு அளிக்கும் கூட்டத்தில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் உரையாற்றும் போது எடுக்கப்பட்ட படம்.

## சட்டவிரோத மது விற்பனை கைதடிப் பகுதியில் அதிகரிப்பு

### தடுக்க மக்கள் கோரிக்கை

கைதடி,ஓக.28

சட்டவிரோத மதுபான விற்பனை மீண்டும் கைதடிப் பகுதியில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கைதடி தென் கிழக்கு, கைதடி மத்தி ஆகிய பிரதேசங்களிலேயே இந்த சட்டவிரோத மது விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக இரவுவேளைகளில் சண்டைகளும், சச்சரவுகளும் ஏற்படுவதாகவும் -

சட்டவிரோதமாக விற்கப்படும் மது அருந்திவிட்டு போதை தலைக்கேறிய நிலையில் அப்பகுதியில் சிலர் போவோர் வருவோரை வலுச் சண்டைக்கு இழுப்பதாகவும் -

இதனால், அப்பகுதியில் குறிப்பாகப் பெண்கள் நடமாட முடியாதுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய சட்டவிரோத மது விற்பனையை உடன் தடுத்து நிறுத்த கைதடி பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் விரைந்து உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் - இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-75)

## மனைவியைப் பயமுறுத்தியவரின் விளையாட்டு வினையானது!

### சுன்னாகத்தில் பரிதாபச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஓக.28

மனைவியுடன் ஏற்பட்ட தகராறை அடுத்து கிணற்றுள் குதித்து உயிர்விடப் போவதாகப் பயமுறுத்தியவரின் விளையாட்டு வினையாகியது.

சுன்னாகம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இச்சோகச் சம்பவம் இடம்பெற்றது.

இதுபற்றித் தெரிய வருவதாவது:-

கணவன், மனைவி இடையே சம்பவதினம் தகராறு ஏற்பட்டதாகவும் - இதனையடுத்து மனைவியைப் பயமுறுத்தும் நோக்கில் கணவர் கிணற்றடிக்கு ஓடிச்சென்று கப்பிக் கயிற்றைத் தனது உடலில் கட்டிக்கொண்டு கிணற்றில் குதித்ததாகவும் - அப்போது கயிறு உடலில் சிக்கி கிணற்றில் மூழ்கி அவர் உயிரிந்ததாகவும் - கூறப்படுகிறது.

சுன்னாகத்தைச் சேர்ந்த சிவகுரு செல்வநாயகமூர்த்தி (வயது 48) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார். இவரது சடலம் தற்பொழுது யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த மகேந்திரன் யதுஷன் (வயது4) என்ற சிறுவனும் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளான்.

கிணற்றில் தண்ணீர் எடுக்க முயன்ற வேளையிலேயே தவறி வீழ்ந்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-10-15-ரி)

## தீவக வைத்தியசாலையில் மேலதிகக் கட்டணம் அறவீடு

### பொதுமக்கள் தரப்பில் விசனம்

தீவுப் பகுதியில் உள்ள மாவட்ட தரத்திலான அரச வைத்தியசாலையில் மக்களிடம் இருந்து மேலதிக சிகிச்சை என்ற பெயரில் பெருமளவில் கட்டணம் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேலணை அரச வைத்தியசாலையில் இந்தக் கட்டண வசூலிப்பு அண்மைக்காலமாகத் தொடர்ந்து இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஊசி மருந்து ஏற்றுவதற்கு ரூபா 60இல் இருந்து 80 வரை ஒருவரிடமிருந்து பெறப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கிராம அலுவலர்கள் மற்றும் பொது நிறுவனங்களிடம் பொதுமக்கள் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளபோதும் இந்த விடயத்தில் எவரும் அக்கறை எடுக்கவில்லை என்று இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-88)

### நாளை

ஆவணி 12
வெள்ளிக்கிழமை
(29.08.2003)
திதி : துதியை
முன்னிரவு 8.58 வரை
நட்சத்திரம : உத்தரம்
பின்னிரவு 4.35 வரை
சுபநேரம் : 6.05 - 7.35
ராகுகாலம்: 10.35-12.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மனிதர்களின் இதயங்களில் அதிகம் குடிகொண்டிருப்பவரே மாமனிதர் எனப்படுகிறார்.

## மண்டைதீவு மாணவியர் அச்சுவேலிக்கு திடீர் மாற்றம்

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை உள்ள வகுப்புகளில் கல்வி கற்றுவந்த இருபதுக்கும் மேற்பட்ட மாணவிகள் ஒரே நாளில் அச்சுவேலியில் இயங்கும் பாடசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறந்த கல்வி வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகக் கூறியே இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு உள்ளனர். இவர்களில் இந்துசமய மாணவிகள் பலர் அடங்கியுள்ளனர்.

குடும்பத்தில் அதிக பெண் பிள்ளைகள் உள்ள வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகளே இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலிப் பாடசாலையில் சைவ சமயம் போதிக்கப்படாததால் துளசி என்ற தரம் 6 மாணவி மீண்டும் மண்டைதீவு மகா வித்தியாலயத்திற்குத் திரும்பி வந்துள்ளார்.

இந்த மாணவிகள் பாடசாலை விடுகைப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஏதும் இன்றி சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. யுத்தம், இடப்பெயர்வு போன்ற விசேட காரணங்கள் இன்றி மூன்றாந் தவணையில் இவ்வாறு மாணவர்கள் பாடசாலையில் அனுமதிக்க முடியாது என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. பொது அமைப்புகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மண்டைதீவுப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-88)

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 16 - 12 - 1980



விண்ணில் 02 - 09 - 1997

### செல்வி கவிதா சின்னையா

திதி-பிரதமை

கடைக்குட்டியாய் மலர்ந்த எங்கள் கவி!
விடைபெற்றுச்சென்று ஆறாண்டு ஆனதுவோ?
உடைபட்ட நெஞ்சம் இன்னமும் ஆறவில்லை அம்மா
உலகத்தில் உன்னை இனியெப்போ காண்போம் ராசன்
மனசுக்கினியவளே மங்காத ஒளிவிளக்கே ~ எங்கள் கவி
மாசில்லா இன்வதனம் மண்ணிலேயேன் ~ மறைந்ததுவோ?
உந்தன் நினைவினிலே வாடுகிறோம் நாம் இங்கே
நிறைநிலவே நீயிங்கே வருகின்ற நாளெப்போ?
எங்களின் ஒளிவிளக்கே! நீ வேல் முருகனுடன்
திருவுலா சென்று ஆறு ஆண்டுகள் ஆனதுவோ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(21-14-13)

உன் பிரிவினால் வாடும்:
அப்பா, அம்மா

அண்ணாமார்:
சி.திருமாறன் - சுவிஸ்
சி.திருமாவளவன் - சுவிஸ்

அக்காமார்:
ந.திருமலர் - லண்டன்
ம.திருமகள் - ஜேர்மனி
தே.திருவளர்ச்செல்வி-ஜேர்மனி

அத்தான்மார்:
ம.நவநீதன் - லண்டன்
அ.மகிழ்ரூபன் - ஜேர்மனி
பெ.தேய்வேந்திரன் - ஜேர்மனி

அண்ணிமார்:
தி.கல்யாணி-சுவிஸ்
தி.சர்மிளா -சுவிஸ் (21843)

பெறாமக்கள்
ந.திவாகர் - லண்டன்
ந.சிவன்யா - லண்டன்
ந.பானுஜா - லண்டன்
ம.ஓவியா (கஜோலி) - ஜேர்மனி
ம.ஆதவன் - ஜேர்மனி
தே.ஆகாஸ் - ஜேர்மனி

மருமகன்
தி.கவிஸ்சனா - சுவிஸ்

தி.சின்னையா
"கவிதாலயா"
*இல. 06, நொத்தாரிஸ் லேன்,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு 25 - 07 - 1924



உதிர்வு 09 - 09 - 2002

### அமரர் கதிரவேலு சபாபதி

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். சிறுப்பிட்டி)

திதி: 29.08.2003 துதியை

எங்கள் குலத் தெய்வமே!
பாசம் நிறைந்த அப்பாவே
பாசத்தின் உறைவிடமே
கடமை மிகு தலைவனாய்
பரிவும் பாசமும் காட்டி
எங்களை மிளிர வைத்த அப்பாவே!
ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட எங்கள் இதய தெய்வமே!
நீங்கள் எங்களைப் பிரிந்து ஓராண்டானாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு
என்றென்றும் அகலாத அப்பாவே!

நாளை (29.08.2003) வெள்ளிக்கிழமை மதியம் நடைபெறுகின்ற நினைவு நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

48/1, வீசுவமடு கிழக்கு,
வீசுவமடு.
(21788) (26-21-14-13)

- குடும்பத்தினர்

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சுபானு வருடம் ஆவணிமாதம் 12ஆம் நாள் (29.08.2003) வெள்ளிக்கிழமை பகல் 9.24 முதல் 10.01 வரையுள்ள துலாலக்கினமும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது
செல்வப் புதல்வன்
திருநிறை செல்வன்
**குகதாசன்**
அவர்களுக்கும்



எமது
செல்வப் புதல்வி
திருநிறை செல்வி
**தயாநிதி**
அவர்களுக்கும்

மாங்கல்ய தாரணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் இறைவன் திருவருள் துணைகொண்டு நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம கோவிலில் நடைபெறும் திருமண வைபவத்திலும் மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு உபசாரங்களிலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.அ.சுப்பிரமணியம் அரியமலர் தம்பதிகள்
சு.உதயதாஸ் தம்பதிகள்
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

திரு.உலகநாதன் புவனேஸ்வரி தம்பதிகள்
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(இரு வீட்டார் அழைப்பு)

(21891) (21-13-14-32)

இலங்கை அரசு

## வடக்கு - கிழக்கு மாகாணசபை

## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்

## கடன் இல.: 2880 சி.இ.

## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்

## (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

ஐ.எவ்.பி.இல: ஜே.எவ்./நீர்ப்/டிபிடிஏச்எஸ்/04 திகதி:28-08-2003

1. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன் வசதி ஐ.டி.எ.(IDA) நம்பிக்கையின் கீழான வசதி.
2. *மாவட்ட செயலாளர் யாழ்ப்பாணம்,* இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பின்வரும் கட்டட தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.
3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் 1,000/- ஐ காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில், *பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்* அவர்களிடம் இருந்து 29.09.2003 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணி வரை கேள்விப் பொதக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிரதம எந்திரி (கட்டடங்கள்) யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி / தொலைநகல் இல. 021- 2222632

5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, *அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு 30.09.2003 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதே தினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்க்ள் பெறப்பட்டு திறக்கப்படும்.
6. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### விவர அட்டவணை

| கேள்விக்குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1. ஜே.எவ்./நீர்ப்/டி.பி.டி. ஏச்.எஸ்.15 | மாவட்ட வைத்திய சாலை, தெல்லிப்பழை யில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் மீள்நிர்மாணம். | 220,000/- | 1,000/- | 12 மாதம் |

7. கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாண குறிப்புகள் 4 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

(c/29681) (25-21-13-14)

செ.பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

# வடக்கு - கிழக்கில் புலிகளின் நிர்வாகத்தில் அரசியல், நீதி, நிர்வாகம் சீராக இயங்கும்!

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. தெரிவிப்பு

ஆரையம்பதி,ஓக.28

மிக விரைவாக இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் கையளிப்பதன் மூலம் அரசியல், நீதி, நிர்வாகத்தைச் சீராக இயங்கவைக்கமுடியும். வடக்கு - கிழக்கு முழுமையாக செப்பனிடப்பட்டுத் தேவையான அபிவிருத்தி வேலைகளைச் செய்யும் ஆர்வம் புலிகளிடமே உள்ளது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டு அவர்களின் பின்னால் அவர்களுக்குப் பக்கபலமாகச் செயற்பட வேண்டும்.

மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் ஆரம்பமான "மக்கள் எழுச்சி சங்கமம்" நிகழ்வில் இறுதி நாள் விளையாட்டு நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை புளியந்தீவு கோட்ட அரசியல் பொறுப்பாளர் சேனாதிராஜா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்விலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு பொதுச்சுடரை நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஏற்றி வைத்து உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:-

தமிழர்களை ஒரே கட்டமைப்பினுள் கொண்டு வருவதற்காக இவ் விளையாட்டு விழா ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உலக நாடுகளின் பார்வையை இலங்கைப் பக்கம் திருப்பச் செய்த பிரபாகரனும், விடுதலைப் புலிகளும் விடுதலை வரலாற்றில் சரித்திரம் படைத்தவர்கள்; இனியும் படைப்பார்கள்.

யுத்தநிறுத்த சூழ்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தலைவர் பிரபாகரன் தமிழர் தாயகத்தில் வைத்து கைச்சாத்திட்டதினால் இலங்கையில், தமிழர் தாயகமானது வேறு ஒருநாடு என்பதை உணர்த்தியுள்ளது.

- இவ்வாறு அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் புலிக்கொடியை ஏற்றினார். இந்த நிகழ்வில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன், மாவட்ட அரச அதிபர் இ.மோனகுருசாமி ஆகியோர் உரையாற்றினார்கள். காலையில் ஆரம்பமான மரதன் ஓட்டத்தை விடுதலைப் புலிகளின் மகளிர் அணியைச் சேர்ந்த காயா, போக்குவரத்துப் பொலீஸ் அதிகாரி அபயசேகர, திருப்பெருந்துறை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். இதனையடுத்து கிரிக்கெட் போட்டியும், உதைபந்தாட்டப் போட்டியும், சிறுவர், முதியோர் உள்ளிட்ட பல தரப்பட்டோருக்கான விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ஒ)

### கொடிகாமம் ஆஸ்பத்திரியில்

## பிரசவ விடுதியை இயங்கவைக்க பொது அமைப்புகள் கோரிக்கை

தென்மராட்சி,ஓக.28

கொடிகாமம் ஆஸ்பத்திரியில் பிரசவ விடுதியை உடனடியாக இயங்கவைக்குமாறு இப்பகுதி பொது அமைப்புகள் ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபை ஊடாக யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளரைக் கோரியுள்ளன.

தென்மராட்சி கிழக்குப் பிரதேசமான மிருசுவில், கெற்பேலி, உசன், விடத்தற்பளை, போக்கட்டி, தவசிகுளம், மிருசுவில் வடக்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு, கொடிகாமம், பண்டிதர் குடியிருப்பு, பாலாவி, கச்சாய் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பொது அமைப்புகளே கொடிகாமம் ஆஸ்பத்திரியில் பிரசவ விடுதியை ஆரம்பிக்குமாறு கோரிக்கை மகஜர் அனுப்பியுள்ளன.

இப்பகுதிகளில் பெரும்பாலான மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதால் இப்பகுதி கர்ப்பிணிகள் தமது தேவைக்காக சாவகச்சேரி, மந்திகை ஆகிய ஆஸ்பத்திரிகளுக்குப் பெரும் சிரமங்களின் மத்தியில் செல்லவேண்டியுள்ளதாகவும் -

பளை, மருதங்கேணி பகுதிகளில் இன்னமும் பிரசவ விடுதிகள் இயங்காததால் அப்பகுதி கர்ப்பிணிகளும் இப்பிரசவ விடுதியில் சிகிச்சை பெற வாய்ப்புள்ளதாகவும் - மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-117)

### தொடர்வேலை நிறுத்தத்தால்

## சம்பளம் பெற முடியாது பல்கலைகளில் திண்டாட்டம்

அட்டாளைச்சேனை,ஓக.28

பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் தொடர்ச்சியான வேலை நிறுத்தப்போராட்டத்தால் கற்கை சார்ந்த, கல்விசாரா பணியாளர் கள் தமது சம்பளத்தைப் பெறமுடியாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

கற்கை சாரா பணியாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தி வருவதால் பல்கலைக் கழகங்களின் பணிகள் முடங்கியுள்ளதையடுத்தே பணியாளர்கள் தமது சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி பல்கலைக் கழகங்களின் சம்பள தினமாக இருந்த போதும், சம்பளம்பெற வந்த விரிவுரையாளர்கள் உட்பட கற்கைசாரா பணியாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் சம்பளம் பெறாமல் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

## பொலீஸ் படைக்கான தேர்வுக்கு 2000 பேர் தோற்றியுள்ளனர்!

அரசு கிழக்கிலங்கையில் மேற்கொண்ட பொலீஸ் படைக்கான நேர்முகத்தேர்வில் 2 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த 2 ஆயிரம் பேரில் சிங்கள இனத்தவர்கள் கூடிய அளவிலும் முஸ்லிம் இனத்தவர் அதற்கடுத்த கூடிய அளவிலும் கலந்துகொண்டனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் இடம்பெற்ற இரு முஸ்லிம் இளைஞர்களின் கொலைகளை அடுத்து ஏற்பட்ட அழுத்தத்தை ஏற்றுக்கொண்டு புதிதாக சேர்ப்பதற்காக ரணில் அரசு இணங்கிய 500 பொலீஸ உத்தியோகத்தர்களையும், 50 பொலீஸ் இன்ஸ்பெக்டர்களையும் உள்ளடக்கிய புதிய பொலீஸ் படைக்கான நேர்காணல் கடந்த சில நாள்களாக இடம்பெற்றன.

முதல் இரண்டு நாள்களிலும் கிழக்கு மாகாணத்தில் 2ஆயிரம் இளைஞர்கள் கலந்துகொண்டனர் என்றும் - இதிலே 98 வீதமானவர்கள் சிங்கள இன இளைஞர்கள் என்றும் - இரண்டாவது நிலையில் சிங்களத்தை முதல் மொழியாகக் கொண்ட முஸ்லிம் இளைஞர்கள் அடங்கியிருந்தார்கள் என்றும் - கிழக்கிலங்கை செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ)

## வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு தனியான ஆணைக்குழு வேண்டும்

### ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை

வடக்கில் வாழ்ந்த முஸ்லிம் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கென தனியான ஆணைக்குழு ஒன்றை அமைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

1990ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வட பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டதால், அவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதை நோக்காகக் கொண்டு ஆணைக்குழுவை அமைக்குமாறு மேற்படி அமைப்பு கோரியுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையிலேயே வடபகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், வட பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் இழந்தவற்றை அடிப்படையாக வைத்து நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என்று அந்த அமைப்புக் கேட்டுள்ளது.

### சப்ரகமுவ மா. சபையின் தலைவர் விளக்கமறியலில்

கொழும்பு,ஓக.28

சப்ரகமுவ மாகாணசபை முதலமைச்சரின் கேகாலையிலுள்ள உப அலுவலகத்தின் மேசை லாச்சியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கைக் குண்டுகளை கேகாலைப் பொலீஸார் கண்டு பிடித்திருக்கின்றனர்.

இதனையடுத்து, அந்த அலுவலகத்தைப் பயன்படுத்துபவர் எனக் கூறப்படும் சப்ரகமுவ மாகாண சபையின் தலைவரான ஸ்ரீலால் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார்.

கேகாலை நீதிவான் பிரியந்த டி.சில்வா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட அவர் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

### நல்லூர் ஆலய சூழலில் இன்று

இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் 'நல்லூர் முருகனை நீ நாடு' என்னும் நாட்டிய நிகழ்ச்சி இடம்பெறும்.

பாட்டு - எஸ்.சுகன்யா, ஜி.தீபன் ஆகியோர். மிருதங்கம் - எஸ்.துரைராசா, வயலின் - எ.ஜெயராமன், கே.வனஜா, கீபோட் - என்.செல்வச்சந்திரன், வீணை - ஜே.சுந்தரேஸ்வரி, தபேலா - எஸ். விமல்சங்கர், கடம் - ஏ.செல்வரட்ணம், நட்டுவாங்கம் - ரோகிணி மருதவாணர். (ஒ-10)

★ ★ ★

நல்லூர் சைவ மகாசபையினரால் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று மாலை 6 மணிக்கு 'சிவலிங்க சாட்சி' பற்றி சிவஸ்ரீ சி.வை.நித்தியானந்தசர்மா இசைச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.(எ-10)

★ ★ ★

வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று மாலை 6 மணிக்கு இசைப் பேரரசு நா.வி.மு.நவரட்ணம் குழுவினரின் 'தெய்வீக இசை விருந்து' இடம்பெறும். (ஒ-10-30)

★ ★ ★

'புலிகளின் குரல்' ஏற்பாட்டில் ஆலயதெற்கு வீதியில் மாலை 6 மணிக்கு பொன்.காந்தன் தலைமையிலான 'இந்தப் பொழுதுகளில் அந்தப் பொழுதுகளை' என்னும் தலைப்பிலான கவியரங்கமும் இசைப்பிரியனின் எழுச்சி கானங்களும் இடம் பெறும். (ஒ-10)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

இருபத்தியாறாம் திருவிழா (பூங்காவனம்)



### ஓங்கார முருகா!

பூங்கா வனமுடன் நினை நீங்கா வரம் வேண்டும்
தாங்கா துயர் எமை நீங்கிட அருள் வேண்டும்
ஏங்கும் மனம் என்றும் ஏங்கா நிலை வேண்டும்
ஓங்கும் இனம் எமை தாங்கிட நிலம் வேண்டும்
மங்காத புகழ் எங்கும் தங்கிட நலம் வேண்டும்
தூங்காத விழிகள் சுமை சுமந்திட பலம் வேண்டும்
ரீங்கார மிடும் நினது மந்திரங்களால் நிம்மதி வேண்டும்
ஓங்கார முருகன் நாமம் ஓங்கியே ஒலித்திட வேண்டும்.

மட்டுவிலூர் மு.வே.அன்பழகன்.

### உன் பாதம் பணிந்தோம் குமரா!

ஓங்காரக் கணபதியின் ஓர் உத்தமத் தம்பியே!
உன்பாதம் பணிந்தோம் உளமிக மகிழ்ந்தே
ஆங்காரங்கொண்ட அசுரனை அழித்திடவே
அரனவன் நெற்றிக் கண்ணில் அக்கினியாயுதித்தோய்!
நீங்காமலடியாருள்ளமதில் நின்று நிலைத்திடவே
வள்ளி தேவயானையை வதுவை நீ செய்தே
பூங்காவனத்திலின்று புத்தொளி பரப்பும் நல்லை
முருகனே முத்துக்குமரனே சரணம்! சரணம்!!

- சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

### விடியலின் பாதையைக் காட்டிவிடு!

விழலாகி நொந்திடும் பக்தரின்
விதி மாற்றிடும் வேலவனே!
வழி தெரியா தடுமாறிடும் எமக்கு
விடியலின் பாதையைக் காட்டிவிடு!

- சி.சிவகௌரி
மட்டுவில்.

### உத்தமி உமையாள் மைந்தா!

அல்லலா லவதி யுற்றே
ஆவிசோர்ந் தலறு கின்றோம்
தொல்லையாற் றுன்ப முற்றோ
துடிதுடித் தலறு கின்றோம்
ஒல்லையில் வருவா யோடி
உத்தமி யுமையாள் மைந்தா
நல்லைவாழ் நம்பா கந்தா!!
நாடினோ மருள்செய் வாயே!

- எம்.கே.இளையப்பு.

### கண் திறவாய் கந்தவேளே!

நோன்புடனே அங்கப்பிரதட்சணை
அடியழித்தலூடு உடலை வருத்தி
உனைத்தொழும் அடியவரை
உயரத்தில் வைத்திடப்பா!
களங்கமின்றி உன்பாதம் தினந்தினம்
பணிதெழும் கன்னியர்க்கு
இஷ்ட நல் சித்திகள் ஈயுமப்பா!
இன்னலுறும் நம்மக்கள்
இடரகன்று இன்புற்றிருக்க
உன் பாதம் பணிந்து இறைஞ்சுகின்றோம்
கண்திறவாய் கந்தவேளே!

- றஞ்சனா குணரட்ணம்
இருபாலை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வலய நலன்புரிக்கழக உறுப்பினர்களான

**திரு.மருதலிங்கம் பிரதீபன்**

**செல்வி பிரபா கந்தசாமி ஐயர்**

ஆகியோர் இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவுசெய்யப் பட்டமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நலன்புரிக்கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(21921) (19-24-13-18)



## UNIVERSITY OF JAFFNA

**FACULTY OF GRADUATE STUDIES**

**M.Sc. Course in Physics of Materials**

Applications are invited from qualified candidates to enroll for the programme of study leading to a Master of Science (M.Sc.) Degree in Physics of Materials, scheduled to commence in October 2003.

***Course duration:*** one academic year (full time)

***Medium of Instruction:*** English

***Admission Requirements:***

Graduates possessing one or more of the following qualifications will be considered for admission to the M.Sc. programme.

(a) Honours / Special Degree in Physics from a recognized University.

(b) Honours / Special Degree in Chemistry from a recognized university with sufficient knowledge of Mathematics.

(c) B.Sc. (Engineering) Degree from a recognized university with sufficient knowledge in the Science of Materials .

(d) B.Sc. (Material Science) Degree from a recognized University.

(e) B.Sc. (General) Degree with Physics as a subject from a recognized University with good performance in Physics as judged by the Board of Studies of the Faculty Board of Graduates Studies of the University of Jaffna.

***Course fee:*** Rs.50,000/- Plus registration fee of Rs.2,500/- and a refundable Library deposit of Rs.500/- and Laboratory deposit of Rs.1,000/-. The course fee is payable either in one installment at the time of registration or in two equal installments one at the time of registration and the other before the commencement of the second semester.

***Scholarships:*** A few scholarships are available under the ADB Science and Technology Personel Development Project of the Ministry for Economic Reform Science & Technology. 60% of the scholarships will be given to female students and 40% to males coming from disadvantaged families.

***Selection:*** By interview

***Method of Application:*** Further information and application forms can be obtained from the Assistant Registrar / Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely, Jaffna.

***Closing Date for Application: 25 September 2003.***

**Registrar**
**University of Jaffna.**

(C/29810) (24-13-18-15-19)



## நன்றி நவில்கின்றோம்

கடந்த 20.07.2003 அன்று இறைவனடி சேர்ந்தவரான

எமது குடும்பத் தலைவி

**திருமதி முத்துப்பிள்ளை செல்லையா**

**(இளைப்பாறிய ஆசிரியை)**

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய அன்புள்ளங்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அவரின் இறுதிக்காலத்தில் பல்வேறு உதவிகள் புரிந்தவர்களுக்கும் மற்றும் உறவினர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனைக்கோட்டை. (21914)(13-18) - உறவினர்கள்.



## மரண அறிவித்தல்

**சூசைப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை**

24/2, சென் அன்ரனீஸ் லேன், பாஷையூரைச் சேர்ந்த சூசைப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் 26.08.2003 செவ்வாய்க்கிழமை இரவு 10.25 மணிக்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (28.08.2003) வியாழக்கிழமை மாலை 4மணிக்கு இல.56, செபஸ்ரியன் வீதி, பாஷையூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடலுக்கான நல்லடக்கம் கொட்டடி சேமக காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.பரீமன் (நிசல்டா)
போதகர் காந்தி.

இல.56, செபஸ்ரியன் வீதி.
பாஷையூர். (21910) (26-24-13-18)


## கசிப்பு வைத்திருந்த நபருக்கு 2 வருடச் சிறை

யாழ்ப்பாணம்,ஓக.28

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் இரண்டு வருட கடுழியச் சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசசிங்கம் சேகரன் என்பவருக்கே இரண்டு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. இந்த நபர் முன்னர் ஒரு தடவையும் இதேபோன்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடவை இருவருட கடுழியச் சிறைத் தண்டனையை விதித்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்ரி.விக்னராஜா தண்டப்பணமாக 50 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

கடுழியச் சிறைத்தண்டனைக்குட்பட்ட காலப்பகுதியில் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட அபராதப் பணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஒருவருட கடுழிய சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் எனவும் அறிவுறுத் தப்பட்டுள்ளது. (ஓ-5)

## வீதியைத் திருத்த கோரிக்கை

வரணி,ஓக.28

வரணி இடைக்குறிச்சி கரம்பைக் குறிச்சி, நாவற்காடு ஆகிய கிராமங் களினூடாக சுட்டிபுரம் - வடக்கு மிருசுவில் பிரதான வீதியை அடையும் வீதி பல வருடங்களாகத் திருத்தப் படாமல் உள்ளது.

சுமார் 5 கிலோமீற்றர் தூரம் வரையான வீதி நடந்துகூட பிரயாணம் செய்யமுடியாத நிலையில் சேதமடைந்துள்ளது. சாவகச்சேரி பிரதேச சபையின் பராமரிப்பில் உள்ள இவ் வீதியைப் புனரமைக்கும் படி அப்பகுதிப் பொதுமக்கள் கோரி வருகின்றனர். (ஓ-170)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வு ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் இதுவரை நிறுத்தப்பட்டிருந்த பூஜை வழிபாடுகள் எதிர்வரும் முதலாம் திகதிமுதல் வழமைபோல் நடைபெறும் என ஆலய அர்ச்சகர் தெரிவித்துள்ளார். (ஓ-30)

★ ★ ★

பண்டத்தரிப்பு சாந்தை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் 31ஆம் திகதிவரை உற்சவம் நடைபெறும்.

உற்சவ தினங்களில் இரவு 7 மணி முதல் 8 மணிவரை ஓய்வு பெற்ற ஆசிரியர் சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி "விநாயகர் பெருமை" என்ற பொருள் பற்றி உரையாற்றுவார். (ஓ-135)

★ ★ ★

யாழ். அடைக்கல அன்னை ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்ட 75 ஆவது ஆண்டு பெருவிழாவும், வருடாந்த திருவிழாவும் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் தினமும் 5.30 மணிக்கு இடம்பெறும்.

எதிர்வரும் 7ஆம் திகதி மாலை நற்கருணை விழாவும் 8ஆம் திகதி காலை 7மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருவிழா திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ஓ-30)


## துரித விற்பனைக்கு

**VCD SONG**

☆ பிரியமான தோழி
☆ காதல் கொண்டேன்
☆ ஜெயம்

**Audio CD**

★ உள்ளம் கேட்குமே
★ தென்னவன்
★ ஜெயம்

ரூபா 95/= மட்டுமே.

வியாபாரிகளுக்கு
விசேட கழிவுண்டு.

**மூர்த்தி வீடியோ & எலெக்ரோனிக்**

மானிப்பாய்.

(சி-29811) (24-13-18)



## நெஞ்சகலா மூன்றாம் ஆண்டு நினைவு ஊற்று

உவகை ஓங்க
02 - 09 - 1978



கவலை ஓங்க
30 - 08 - 2000

**அமரர் கார்த்திகேசு சிவகுமார்**

திதி: பூர்வபக்கப் பிரதமை

அன்புடனே அருகிருந்து எமை ஆதரித்தீர் ஐயனே
அரைநொடியில் எமை விட்டு எங்கு சென்றீர் ஐயனே?
ஆண்டுகள் மூன்று ஆனாலும் அழியாது உம்நினைவு – என்றும்
ஆறாது சிவசிவா எம் இதய வேதனைகள்!
அன்போடு நாம் அரவணைக்க அடுத்து வரும்பிறவியில் – எம்மிடம்
ஓடிவர வேண்டுமென ஓம்கார நாதனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உம்பிரிவால் துயருறும்:
அன்பின் அப்பா, அம்மா, அக்கா, தங்கை,
மைத்துனர், மருமகன், மருமகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

ஈவினை கிழக்கு,
புத்தூர் - சுன்னாகம் வீதி,
சுன்னாகம். (21916) (19-24-13-18)



## நீங்காத நினைவுகளில் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
11 - 11 - 1939



விண்ணில்
28 - 08 - 1998

அமரர்

**பொன்னையா தியாகராசா**

(முன்னாள் இ.போ.ச.சாலைப் பரிசோதகர் – கிளிநொச்சி, பருத்தித்துறை சாலைகள்)

அப்பா என்று அழைக்காத
உயிருண்டோ உலகினில்
எங்கள் அப்பாவை மறப்போமோ
நாம் எம் வாழ்வினில்?

நல்ல கல்வி நாம் பெற்று
நல்ல நிலையை நாம் அடைந்து
நல்வாழ்வு நாம் வாழ
நல்ல வழி காட்டியவரே!
எம் வாழ்வில் ஏணியாகி
எமையெல்லாம் உயர்த்திவிட்டு
எங்கப்பா நீங்கள் சென்றீர்கள்?
ஏங்குகின்றோம் நாம் இங்கு!

இதயத்தில் எமைச் சுமந்து
இரவு பகல் பாராது
இல்லறத்தை நல்லறமாக்கிய
இதயத்தின் ஒளிவிளக்கே!
எங்கப்பா நீங்கள் சென்றீர்கள்?
ஏங்குகின்றோம் நாம் இங்கு!

தத்தளித்திடும் உலகினிலே
தள்ளாடும் நிலையிலே
தவித்திடும் அம்மாவை
தாங்கிட வாரீரோ
தளர்ந்திடும் நிலையிலும்
தன்துணையை அவதேட
எங்கப்பா நீங்கள் சென்றீர்கள்?
ஏங்குகின்றோம் நாம் இங்கு!

ஆண்டுகள் ஐந்தென்ன
ஆண்டுகள் பல ஆனாலும்
என்றும் உங்கள் நினைவுடன்
நாம் வாழ்வோம்!

உனையே நினைந்துருகும்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

இல.05, புறாடி முன் லேன்,
அரியாலை.
யாழ்ப்பாணம். (21918)(26-24-13-18)

# மண்சரிவில் சிக்குண்டு நால்வர் பரிதாப மரணம்!

மண்திடல் ஒன்று சரிந்து வருவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 4 பேர் அதில் சிக்குண்டு பரிதாபமாக உயிரிழந்தனர்.

இச்சம்பவம் தலங்கம - கண்டவத்தை என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

40 அடி உயரமான மண்திடல் ஒன்று சரிவதைக் கண்டு அதைத் தடுக்கும் முகமாக அந்த இடத்தில் அத்திபாரம் ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்களே மண் சரிவில சிக்குண்டார்கள். இந்த விபத்தில் ஒருவர் உயிர் தப்பியுள்ளார்.

பிரதேச பொதுமக்களும் பொலீஸாரும் மண் அகழும் இயந்திரங்களின் உதவியுடன் விபத்தில் சிக்குண்டவர்களை மீட்டனர். ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். மூவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கு உயிரிழந்தனர். (ஒ)

## கண்ணிவெடி அகற்ற சுவீடன் நிதியுதவி

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கண்ணிவெடி அகற்றுவதற்காக சுவீடன் அரசு 11 கோடி 40 லட்சம் ரூபாவை நிதியுதவியாக வழங்கவிருக்கிறது.

2003-2004 ஆம் ஆண்டுக்கான கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சீடா நிறுவனத்தின் ஊடாக சுவீடன் அரசாங்கம் இந்த நிதியை வழங்கவிருக்கிறது.

யுத்தத்தால் வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தும் நோக்கில் இந்த நிதி வழங்கப்படுகிறது.

# பனிப்புலம் ஆலய உற்சவத்தில் வெடிபொருள் ஒன்று வெடித்தது

சுழிபுரம் சம்புத்துறைப்பகுதியில் கண்ணிவெடி அபாயம் இருப்பதாக அங்கு சென்று வந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

தடை செய்யப்பட்ட பகுதியாக உள்ள சம்புத்துறை கடற்கரைக்கு பனிப்புலம் அம்பாள் ஆலயத்தின் தீர்த்தோற்சவத்தையொட்டி படையினரின் அனுமதி பெற்று சென்றவர்களே இது பற்றித் தெரிவித்துள்ளனர்.

அம்பாள் சகிதம் அடியார்கள் சென்று கொண்டிருந்த வேளையில் கடற்கரை வீதியோரமாக திடீரென கண்ணிவெடி ஒன்று பலத்த சத்தத்துடன் வெடித்ததாகவும் -

ஆனால், தெய்வாதீனமாக எவருக்கும் எவ்வித தீங்கும் ஏற்படவில்லை என்றும் -

பொறிவெடியே வெடித்ததாகவும் - அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் மட்டும் பயன்படுத்துகின்ற இப்பகுதியூடாக காரைநகர் மற்றும் காங்கேசன்துறை படைமுகாம்களுக்கான போக்குவரத்துகள இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ஒ-10-28)

# பயன்பாட்டுக்கு இலகுவான மென் கொங்கிறீற் தகடுகள்

யாழ்ப்பாணத்தில் மென் கொங்கிறீற் கூரைத்தகடுகள் (MCR Sheets) சிமெந்து, மணல், 5மி.மீ.சல்லி ஆகிய குறைந்தளவு மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. இதன பருமன் 8மி.மீ முதல் 10மி.மீவரை ஆகும். சாதாரண மண் ஓடுகளுக்கு தேவைப்படும் மரங்களை விட குறைந்தளவு மரங்கள் இந்த கூரைத்தகடுகள் கொண்டு கூரை அமைக்கப்போதுமானவை. அத்துடன், குளிர்மையானதாகவும். உடல் நலத்திற்கு எதுவித கெடுதலும் விளைவிக்காத வகையிலும் இத்தகடுகள் தயாரிக்கப்படுகின்றன. அத்துடன் மேலதிக போக்குவரத்து செலவுகள் இதன் விற்பனை விலையில் உள்ளடக்கப்படாததால் விலை குறைவானதாகவும் காணப்படுகின்றது.

இந்தக் கூரைத்தகடுகள் 1997 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் (GTZ) பாடசாலை புனரமைப்பு வேலைகளுக்காக உற்பத்தி செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து வீட்டுத் திட்ட வேலைகளுக்கும், மீள் கட்டுமான புனரமைப்புப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மண்ஓடுகள், அதிகளவு மரங்களை கூரைவேலைக்கு உள்வாங்கிக் கொள்வதால், பெருமளவு மரங்கள் அழிக்கப்படுவதாக சூழல் பற்றிய தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

மேலும் யாழில் கரித்தாஸ் போன்ற நிறுவனங்கள், இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு கட்டிக்கொடுக்கும் வீடுகளுக்கு MCR கூரைத்தகடுகளினையே பயன்படுத்தி வருகின்றன. கிளிநொச்சி, முரசுமோட்டை ஆகிய வீட்டுத்திட்ட வேலைகளிலும் இக் கூரைத்தகடுகளின் பயன்பாட்டினைக் காணமுடிகின்றது.

தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO) எம்சி.ஆர் தகடுகளின் தயாரிப்பை மேற்கொண்டு வருவதுடன், அவ்விடங்களில் வீட்டுத்திட்ட புனரமைப்புப் பணிகளுக்கும் பெருமளவில. இக் கூரைத்தகடுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வுற்பத்தியின் சிறப்பம்சம் என்னவென்றால் தேவைக்கேற்ப அந்தந்த இடங்களில் வைத்து உற்பத்தியினை மேற்கொள்வதன் மூலம் புனரமைப்பு வீட்டுத்திட்ட வேலைகளுக்கு உதவுவதுடன், அச்சூழலில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாகவும் அமைகின்றது. (ஒ)


மென் கொங்கிறீற் கூரைத்தகடு கொண்டு அமைக்கப்பட்ட கூரை

# இலங்கைத் தேயிலை தாய்லாந்தில் அறிமுகம்

கொழும்பு,ஓக.28

இலங்கையில் உற்பத்தியாகும் தேயிலையை தாய்லாந்து சந்தையில அறிமுகப்படுத்தும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கை வந்திருந்த தாய்லாந்துப் பிரதமர் தகசின் சினாவர்தாவின் விஜயத்தை நினைவுகூரும் வகையில் தேயிலை ஏற்றுமதி ஆரம்பிக்கப்பட இருப்பது குறிப்பிடத் தக்கது.

தாய்லாந்துப் பிரதமரை வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க சந்தித்தவேளை இரு நாட்டு வர்த்தக உறவுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதை அடுத்து இலங்கைத் தேயிலை ஏற்றுமதி தொடா பாகவும் ஆராயப்பட்டது. இதன் போது கருத்து தெரிவித்த தாய்லாந்துப் பிரதமர் - இலங்கைத் தேயிலை உற்பத்திகளை தாய்லாந்திற்கு ஏற்றுமதி செய்யுமாறும் அதற்கான வர்த்தக வாய்ப்பைத் தான் ஏற்படுத்தித் தருவதாகவும் தெரிவித்தார்.

இதையடுத்து, தாய்லாந்திற்கான தேயிலை ஏற்றுமதிக்கான பணிகளை மேற்கொண்டு வரும் இலங்கை வர்த்தக திணைக்களம், எதிர்வரும் வாரங்களுள் வர்த்தக பிரதிப்பணிப்பாளர் நாயகம் தலைமையிலான அதிகாரிகள் குழு ஒன்றைத் தாய்லாந்திற்கு அனுப்பி வைக்கவுள்ளது.

இக்குழுவானது, தேயிலைக்கான வரிச் சலுகைகள் தொடர்பிலும் இலங்கையின் மேலும் சில பண்டங்களுக்கு தாய்லாந்துச் சந்தையில் இடத்தைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் அந்நாட்டு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும்.

இதேவேளை, தாய்லாந்திலிருந்து டின்மீன் வகைகளை இறக்குமதி செய்யும் செயற்பாடுகளில் இலங்கை கவனம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது.


# இலங்கை வங்கி பணிப்பாளர்களில் ஒருவர் கடந்த வாரம் யாழ்.வருகை

தெல்லிப்பழை,ஓக.28

இலங்கை வங்கியின் மத்திய பணிப்பாளர் சபையினைச் சேர்ந்த பணிப்பாளர் ஜானக போகொல்லாகம கடந்த வாரம் யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்து குடாநாட்டு இலங்கை வங்கிக் கிளைகளைப் பார்வையிட்டார்.

ஒரு நாள் இங்கு தங்கியிருந்த அவர் தீவகம் தவிர்ந்த ஏனைய 7 இலங்கை வங்கிக் கிளைகளையும் பார்வையிட்டார்.

கிளை முகாமையாளர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடல்களையும் நடத்தினார். கிளைகளில் காணப்படும் முக்கிய குறைபாடுகளை அறிந்து அவற்றை இவ்வாண்டு இறுதிக்குள் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதே தனது நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார். (ம-150)



# லண்டன் பொறியியல் சான்றிதழ் பரீட்சை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலும் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.28

லண்டனில் இயங்கும் சர்வதேச நிறுவனமான 'சிற்றி ஏங்கிள்ஸ்' நடத்தும் பொறியியல் சான்றிதழ் பரீட்சைக்கு அடுத்த ஆண்டுமுதல் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலும் தோற்ற முடியும்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபரும், பிராந்தியப் பணிப்பாளருமான ந.யோகராஜன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

'சிற்றி ஏங்கிள்ஸ்' பொறியியல் சான்றிதழைப் பெறுவதற்கான பரீட்சையை நடத்துவதற்காக இலங்கையில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியும் ஒன்றாகும்.

இப்பரீட்சையில் தோற்றவிரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுடபக் கல்லூரி ஒன்றில் தேசிய சான்றிதழ் தர பொறியியல் பயிற்சி நெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பரீட்சையில் சித்தியெய்தியோருக்கான சான்றிதழ்கள் லண்டனிலிருந்து காலதாமதமின்றி பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான ஒழுங்கினை மூன்றாம நிலைக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது. (ம-12)

# அறவிடப்பட வேண்டிய 'வற்' வரியை வருட இறுதிக்குள் அறவிடத் திட்டம்!

கொழும்பு,ஓக.28

இவ்வருடம் அறவிடப்பட வேண்டிய பெறுமதி கூட்டப்பட்ட வரியை(வற்) இவ்வருட இறுதிக்குள் அறவிடும் வகையிலான புதிய திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது. இவ்வாறு நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் திணைக்களம் கூறுகிறது.

பெறுமதி கூட்டப்பட்ட வரி உட்பட அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய அனைத்து வரிகளையும் அறவிடும் வகையிலான இந்தப் புதிய திட்டம், பிரதமர் மற்றும் நிதி அமைச்சரின் ஆலோசனையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் கொண்ட குழுவொன்று இதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான வரிகளை அறவிடும் வழிமுறைகள் பற்றி இக்குழு ஆராய்ந்துள்ளது.

பாரிய அளவில் வரிசெலுத்தும் சுமார் ஆயிரத்து 200 தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் கோவைகளை கையாளும் புதிய பிரிவு ஒன்று இதற்காக அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய குழு இந்தப் பிரிவின் செயற்பாடுகளை ஆராய்ந்து அவற்றை மேலும தீவிரமாக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தவிர உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட்டு வரி அறவிடுவதில் உள்ள பிரச்சினைகள் இனங்காணப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் வரி ஏய்ப்பாளர்கள் மீது ஆகக்கூடிய சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றிய வாய்ப்புகளை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. அத்துடன் வரியைக் குறைத்துக் காட்டுவோர் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. அவ்வாறான நபர்கள் மீதும் தீவிர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அரசாங்கத்துக்கு இவ்வருடம் கிடைக்க வேண்டிய முழுமையான வருமானம் 304 பில்லியன் ரூபாவாகும். இதில் பெறுமதி கூட்டப்பட்ட வரி மற்றும் இதரவரிகள் மூலம் 265 பில்லியன் ரூபா எதிர்பார்க்கப்படுகிறது. பெறுமதி கூட்டப்பட்ட வரி மூலம் மட்டும் 120 பில்லியன் ரூபாவை அறவிட எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், கடந்த ஜூன் மாதம் வரை 47 பில்லியன் ரூபா மட்டுமே பெறுமதி கூட்டப்பட்ட வரியாக அறவிடப்பட்டுள்ளது. மிகுதியாக உள்ள 73 பில்லியன் ரூபாவையும் புதிய நடவடிக்கை மூலம் இவ்வருட இறுதிக்குள் அறவிட முடியுமென அரசாங்கம் எதிர்பார்க்கிறது.




# பிரிட்டிஷ் வர்த்தகப் பாடசாலையின் சேவை இப்போது வடமராட்சியில்!

கொழும்பில் தனது தலைமையகத்தைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரிட்டிஷ் வர்த்தகப் பாடசாலை (British Business School) தனது கல்விச் சேவையை 140, கோவில் வீதியில் அமைந்துள்ள யாழ்.வளாகம் மற்றும் 174, கண்டி வீதியில் அமைந்துள்ள யாழ். கச்சேரி வளாகம் ஆகியவற்றினூடாக ஆற்றி வருகிறது.

தற்போது வடமராட்சி வாழ்மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தனது கல்விச் சேவையை வடமராட்சிக்கும் இப்பாடசாலை விஸ்தரிக்கின்றது. இதனடிப்படையில் கடந்த 24ஆம் திகதி பி.பி.எஸ்ஸின் வடமராட்சி வளாகம் கிராமக் கோட்டடி, புலோலியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. நிர்வாகப் பணிப்பாளர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் முன்னாள் கல்விப்பணிப்பாளர் (ஆங்கிலம்) D.R.அருமைநாயகம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

சிறுவர்களுக்கும், வளர்ந்தோருக்குமான ஆங்கிலப்பாட நெறிகளுக்கு தலைநகரிலும், யாழ்.நகரிலும் சிறந்து விளங்கும் இந்நிறுவனமானது கல்விச் சமூகத்தின் பேரபிமானத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனமானது சர்வதேச தரத்திற்கமைவாக பாடத்திட்டங்களை அமுல்படுத்தி, அத்துறைகளில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களால் போதிக்கப்படுவதால் தனது சர்வதேச தரத்தை என்றும் பேணிப்பாதுகாக்கிறது.

இந்நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும் சிறுவர்களுக்கான பாலர் பாடசாலையும் அனைத்து மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றது. சர்வதேச தரத்திற்கமைவாக ஆங்கில மொழி மூலமும் நவீன தரம் வாய்ந்த கல்வி உபகரணங்களைக் கொண்டும் இங்கு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுவதும் இப்பாடசாலையின் தரச்சிறப்பிற்கு ஒரு காரணம் எனலாம். (ஒ)

# உலக மெய்வன்மைப் போட்டிகள்

பிரான்ஸில் இடம்பெறும் 9 ஆவது உலக மெய்வன்மைச் சம்பியன்ஷிப் போட்டிகளின் மத்தியஸ்தரின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட அமெரிக்க வீரர் ஜோன் ட்ரம்மன்ட் இத்தொடரின் ஏனைய போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

100 மீற்றர் காலிறுதிப் போட்டியின் ஆரம்பத்தில் தவறிழைத்தமைக்காக ஜோன் ட்ரம்மன்ட் அப்போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். எனினும், அவர் மத்தியஸ்தரின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாமல் ஓட்டப் பாதையில் படுத்துக்கொண்டார்.

இதையடுத்து, ட்ரம்மன்ட் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமெரிக்க தடகள குழுவுக்கு இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை ஒரு மணிவரை சர்வதேச மெய்வன்மைச் சம்மேளனங்களின் சங்கம் (ஐ.ஏ.ஏ.எவ்) காலக்கெடு விதித்தது.

ஆனால், ஐ.ஏ.ஏ.எவ்வின் காலக்கெடுவுக்குள் விசாரணை நடத்தி முடிக்க இயலாதென அமெரிக்க தடகள சங்கம் ஐ.ஏ.ஏ.எவ்விற்கு அறிவித்தது. இதையடுத்து, விளையாட்டுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றத்தின் பேரில் இத்தொடரில் இனி வரும் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு ட்ரம்மன்ட் தகுதியற்றவர் என ஐ.ஏ.ஏ.எவ், செவ்வாயன்று இரவு அறிவித்தது.

இத்தொடரின் 4X100 மீற்றர் போட்டியிலும் ட்ரம்மன்ட் பங்குபற்ற விருந்தார். கடந்த ஒலிம்பிக்கில் 4X100 மீற்றர் போட்டியில் தங்கம் வென்ற அமெரிக்க அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களில் ட்ரம்மன்ட்டும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜோன் ட்ரம்மன்ட் தன்து நடத்தைக்கு வருத்தம் தெரிவித்து பிரத்தியேகமாக ஐ.ஏ.ஏ.எவ் தலைவர் லாமைன் டியாக்கிற்கு கடிதம் எழுதியுள்ளார். ஏனைய போட்டிகளிலிருந்து தாமாக வாபஸ் பெறுவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

மேற்படி சம்பவத்தின் போது ஓட்டப் பாதைக்குள் பிரவேசித்த அமெரிக்க மெய்வன்மைக் குழு நிர்வாக அதிகாரி மைக்கல் கெய்னையும் அமெரிக்க தடகள சங்கம் வாபஸ் பெற்றுள்ளது. இந்நிலையில், மேலதிக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமெரிக்க தடகள சங்கத்தின் முழுமையான விசாரணை அறிக்கையை தாம் எதிர்பார்ப்பதாக ஐ.ஏ.ஏ.எவ். தெரிவித்துள்ளது.

இத்தொடரின் நான்காவது நாளான செவ்வாயன்று நடைபெற்ற 3000 மீற்றர் ஸ்ரீபள் சேஸ் போட்டியில் கட்டார் வீரர் சைவ் ஷஹீன் தங்கப் பதக்கம் வென்றார். உலக மெய்வன்மைப் போட்டிகளில் கட்டார் பெற்ற முதலாவது பதக்கம் இது. இப்பதக்கத்தை வென்ற ஷஹன், முன்னர் கென்ய நாட்டுக்காக ஸ்ரீபன் செரோனோ என்ற பெயரில் போட்டிகளில் பங்குபற்றியவர். 20 வயதான அவர், இந்த மாதமே தனது பெயரை சைவ் சயீட் ஷஹீன் என மாற்றிக் கொண்டர். இறுதிப் போட்டியில் தனது முன்னாள் கென்ய சகாவான ஸெகெல் கேம்போயுடன் கடும் சவாலை எதிர் கொண்டு வென்றார் ஷஹீன்.

கட்டார் சார்பாக போட்டிகளில் பங்குபற்றுவதற்காக ஷஹீனுக்கு மாதாந்தம் 1000 டொலர் வழங்கப்படுவதாகத தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை தங்கப்பதக்கம் வென்றமைக்காக கட்டார் அரசாங்கம் அறிவித்திருந்த 10 லட்சம் டொலர் (சுமார் 10 கோடி) ரூபா போனஸ் பரிசையும் அவர் பெறவுள்ளார். ஆண்களுக்கான 400 மீற்றர் போட்டியில் அமெரிக்க வீரர் ஜெரோம் யங் 44.5 செக்கன்களில்ஓடி தங்கப் பதக்கம் வென்றார்.27 வயதான யங், ஜமைக்காவை பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் மொஸாம்பிக் வீராங்கனை முதோலா மரியா தங்கப்பதக்கம் வென்றார்.

100 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் 3 தடவைகள் உலக சம்பியன்ஸ் பட்டம் வென்ற அமெரிக்க வீராங்கனை கைல் டேவ்ஸ் இறுதி போட்டிக்குத் தகுதிபெறத் தவறினார். 36 வயதான டேவ்ஸ், அரையிறுதிப் போட்டியில் 12.87 செக்கன்களில் ஓடி மூன்றாமிடத்தைப் பெற்றார். எனினும், நேர அடிப்படையில் அவர் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படவில்லை.

100 மீற்றர் தடைதாண்டல் அரையிறுதிப் போட்டிகளில் இரு வீராங்கனைகள் சமமான பெறுபேறுகளைப் பெற்றனர். அதனால், உலக மெய்வன்மைச் சம்பியன்ஷிப் வரலாற்றில் முதல் தடவையாக 100 மீற்றர் தடை தாண்டல் இறுதிப் போட்டிக்கு 9 வீராங்கனைகள் தகுதிபெற்றனர்.

இப்போட்டி நேற்றிரவு நடைபெற விருந்தது. பெண்களுக்கான பரிதி வட்டம் வீசுதல் போட்டியில் பெலாரஸ் வீராங்கனை யட்சென்கோ இரினா தங்கப் பதக்கம் வென்றார்.

திங்களன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில், ஆசிய சம்பியனான இந்திய வீராங்கனை நீலம் ஜஸ்வந்த் சிங்கும் பங்கு பற்றினார்.13 பேரில் அவர் 12 ஆவது இடத்தையே பெற்றார். எனினும், உலக மெய்வன்மை சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற முதலாவது இந்தியர் என்னும் பெருமையை அவர் பெற்றார்.

நீலம் சிங்கிற்கு முன்னர், இந்திய மெய்வல்லுநர்களில பி.ரி.உஷா (400 மீற்றர் தடை தாண்டல்), கே.எம். பீனாமோல் (400 மற்றர்) ஆகியோர் அரையிறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை அறிக்கையின்பின் முடிவு

## மன்னிப்புச் சபைப் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.28

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை அறிக்கை கிடைத்த பின்னரே, சர்வதேச மன்னிப்புச் சபை அதுதொடர்பிலான தனது நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கவுள்ளது.

இப்படித் தெரிவித்திருக்கிறார் சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்கு ஆசியாவுக்கான பிரதிநிதி எலிசபெத் நோவ்செல். பாதுகாவலர் சங்கத்துக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாத இறுதியில் மனிதவுரிமைகள் ஆணைக் குழுவினால மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் பூர்த்தியடைந்துவிடும். அக்குழுவினரின் அறிக்கை கிடைத்த பின்னர் வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக நாம் ஆலோசிக்கவுள்ளோம்.

- இப்படி எலிசபெத் நோவ்செல் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஒ-9)

## அடிக்கல் நடும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஓக.28

கரவெட்டி, துன்னாலை தெற்கு கலிங்கைக் கந்தசுவாமி கோவில் மூலஸ்தானத்திற்கான அடிக்கல் நடும் விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 முதல் 12 மணிவரை உள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் அடிக்கல்லை நட்டு வைப்பார். (எ-8)

## திருநாள் திருப்பலி

குருநகர்,ஓக.27

குருநகர் புனித ஆரோக்கிய நாதர் ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி இன்று காலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருநாள் திருப்பலியை தொடர்ந்து இன்று மாலை 5.45 மணிக்கு புனிதரின் திருச்சொரூபப் பவனி நடைபெறும். (ஒ-51)


யாழ். றோட்டறிக் கழகமும்
மானிப்பாய் றோட்டறக்ட் கழகமும்
இணைந்து நடத்தும்

**இலவச கண் பரிசோதனை முகாம்**

இடம் : Y.M.C.A., கச்சேரி, யாழ்ப்பாணம்.
காலம் : நாளை (29.08.2003) வெள்ளிக்கிழமை
காலை 8.30 - மாலை 4.00 வரை.
3,500/= பெறுமதியான கண்ணாடிகளை
750/= இற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

றோட்டறிக் கழகம்,
யாழ்ப்பாணம். (சி-29823)(32-12-17) - இயக்குனர்.



**கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்**



அமரர்
**இராமசாமி வசந்தகுமார்**

எமது ஸ்தாபனத்தில் பணிபுரிந்த அமரர் இராமசாமி வசந்தகுமாரின் திடீர்மறைவினால் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைகின்றோம்.. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

New Science Hall
New Science College
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

நிர்வாகி. ஊழியர்கள்.
ஆசிரியர்கள். மாணவர்கள்.
(21932)(12-17)



**ST. PATRICK' S COLLEGE, JAFFNA**
**புதிய அனுமதி - 2004**

விண்ணப்பப் படிவம் பரீட்சைக் கட்டணம் உட்பட 250 ரூபா, 01.09.2003 இல் இருந்து, ஞாயிறு, பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 12.30 மணி வரை கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 25.09.2003ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு முன்னர் கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் நேரில் வந்து ஒப்படைக்கவும்.

தபால் மூலமான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

1ஆம் தரத்துக்கு அனுமதிகோரும் பிள்ளைகள் 01.02.1998 இற்கும் 31.01.1999இற்கும் இடையில் பிறந்திருக்கவேண்டும்.

6ஆம் தரத்துக்கு அனுமதிகோரும் பிள்ளைகள் 01.02.1993இல் அல்லது அதற்குப்பின் பிறந்திருக்கவேண்டும்.

ஏனைய வகுப்புக்களுக்கான விண்ணப்பப் படிவங்களையும் அதே நாள்களில் பெற்றுக்கொள்ளலாம். வெற்றிடங்களுக்கேற்ற முறையிலேயே இவ்வகுப்புகளுக்கான அனுமதி வழங்கப்படும்.

அனுமதிப் பரீட்சை 04.10.2003 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். சமுகம் தரவேண்டிய நேரம் காலை 8.30 மணி.

(C/29818) - அதிபர்.



**உடன் விற்பனைக்கு**

19 கேஜ் தகடுகள் பொருத்தப்பட்ட புதிய சுருக்குக் கதவுகள் உடன் விற்பனைக்குண்டு.
16X9½ (இரண்டு கதவுகள்),
8X9½ (ஒரு கதவு) சதுர அடி 300/=.
தொடர்பு:-
இல.41, நாயன்மார் வீதி, நல்லூர்.
T.P.0777 344530.
(21929)(12-17)



**வசந்த மண்டப அடிக்கல் நடும் விழா**

யாழ்ப்பாணம்-கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலய வசந்த மண்டபத்துக்கு அடிக்கல் நடும் வைபவம் நாளை 29.08.2003 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு வரும் சுப முகூர்த்த நல்வேளையில் நடைபெறவுள்ளது.

கௌரவ
மாண்புமிகு இந்து கலாசார அமைச்சர்
திரு. தி.மகேஸ்வரன் அவர்கள்

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வசந்த மண்டபத்துக்கான அடிக்கல்லை நட்டுவைப்பார்கள். அன்பர்கள் அனைவரும் இந்த வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம்,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (21928)(12-17) – பரிபாலன சபையினர்.



**நெஞ்சை விட்டகலாத எட்டாவது வருட அஞ்சலி**

வித்தாக
23 - 11 - 1972



விழுதாக
28 - 08 - 1995

**யோகீஸ்வரக் குருக்கள் கிருஷ்ணராஜ சர்மா**

ஆண்டு எட்டும் ஆயிற்றோ அந்தோ நீர் எமைப் பிரிந்து
ஈண்டு உமது நினைவுடனேயே இப்புவுலகில் வாழ்கிறோம்.
மாண்டு நீர் போனதால் மனதிலே உமது திருமுகம்
நீண்டு நிலைத்து நிற்கிறதே நித்தமும் நிழலாடியே!

பிரிவால் ஏங்கித் தவிக்கும்
குடும்பத்தினர்.
வேலணை. (21935)(32-12-17) அத்தியடி, யாழ்ப்பாணம்.



**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
12 - 06 - 1903



மறைவு
29 - 08 - 2000

திருமதி
**அமரர் பொன்னப்பா இராசம்மா**

எங்கள் அன்னையின் நித்திய நிவேதன தாரகை
இலங்கைநாயகி அம்மன்.

அன்புக் கரம் நீட்டி, எங்களை அரவணைத்து, அன்பு மொழி பேசி எங்களை வளர்த்த தெய்வமே! உங்கள் அன்பு முகம் பார்த்து நாள்கள் கனக்க இப்போது உங்கள் நினைவை என்றும் பாசத்துடன் நிற்கின்றோம் அம்மா. இப்போ நாங்கள் தூக்கமின்றித் துடிக்கிறோம் தாயே! உங்கள் பிரிவுத் துயரில் மூன்று ஆண்டுகள் சென்றாலும் எங்கள் நெஞ்சமதில் உங்கள் ஞாபகம் நிலைத்திருக்கும் அம்மா! எத்தனை யுகங்கள் கடந்தாலும் உங்கள் நினைவுகள் எந்நேரமும் நிற்கும் அம்மா!

அம்மா உங்கள் ஆத்மா சாந்திக்கு
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.4, செட்டித்தெரு, நல்லூர். (21937)(32-12-17)

மக்கள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின்

# ஆசிய பிராந்திய மாநாடு ஞாயிறு கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு,ஓக.28

பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் ஆசியப் பிராந்திய மாநாடு எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஆரம்பமாகும்

செப்ரெம்பர் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இம்மாநாட்டை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுவார். ஆசிய வலயத்தில் நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பலப்படுததல் என்ற தலைப்பில் முதல் நாளன்று கலந்துரையாடல் இடம்பெறும்.

இலங்கையின் சார்பில் இம்மாநாட்டில் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம் அஸ்வர், கண்டி மாவட்ட ஐ.தே.க. எம்.பி. கெஹேலிய ரம்புக்வெல்ல, நுஆ தலைவியும் திகாமடுல்ல மாவட்ட எம்.பியுமான பேரியல் அஷ்ரப், தமிழ்க் கூட்டமைப்பு எம.பி. என்ரவிராஜ் ஆகியோர் கலந்து கொள்வர்.

மாநாட்டில் ஆசிய நாடுகளின்120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றுவர்.

இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டிக்கு விஜயம் செய்வர். அங்கு தலதா மாளிகை தியவதன நிலமே நிரஞ்சன விஜேரத்தின இவர்களை வரவேற்று தலதா மாளிகையில் புனித தந்தத்தை தரிசிக்க அழைத்துச் செல்வார்.

## விடுதிகளில் தங்கியுள்ள அரச உத்தியோகத்தர் விவரம் சேகரிப்பு

குருநகர்,ஓக.28

அரச விடுதிகளில் தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு மேல் வசித்துவரும் அரச பணியாளர்களது விவரங்கள், சம்பந்தப்பட்ட திணைக் களத்தினால் திரட்டப்படுகின்றது.

இவர்களது விவரங்களை உடன் பூரணப்படுத்தி அனுப்பிவைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (எ-51)

## ரயில் சாரதிகள் 2 நாள் வேலைநிறுத்தம்

கொழும்பு,ஓக.28

எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் வேலைநிறுத்தம் செய்வதென ரயில்வே சாரதிகள், ரயில் நிலைய அதிபர்கள், ரயில் கட்டுப்பாட்டாளர்கள், ரயில் காட்மார் ஆகியோர் தீர்மானித்திருக்கின்றனர்.

ரயில்வே அதிகார சபை, அச்சபையில் ஊழியர்களின் உரிமைகள் ஆகியவை தொடர்பாக மேற்குறிப்பிட்ட பதவிகள் வகிப்போரின் சங்கங்களின் கூட்டுக் குழு, போக்கு வரத்து அமைச்சிடம் சில கோரிக்கைகளை முன்வைத்திருந்தது.

அக்கோரிக்கைகள் குறித்து இணக்கம் காணப்படாததாலேயே இரு நாள்கள் வேலைநிறுத்தத்தை மேற்கொள்வதென இக்கூட்டுக் குழு தீர்மானித்திருக்கிறது.

இந்த வேலைநிறுத்தம் குறித்து தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அறிவித்திருக்கிறது.

இதற்கு முன்னர் ரயில்வே ஊழியர்களில் ஒரு பிரிவினர் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தில் ரயில் சாரதிகள், ரயில் நிலைய அதிபர்கள், கட்டுப்பாட்டாளர்கள் ஆகியோர் ஈடுபடவில்லை. (எ)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பாலசுந்தரம் ஆச்சாரியார்

யாழ்ப்பாணம், மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வியாசர் வீதி, இலக்கம் 80A, தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வ பிரம்மஸ்ரீ கந்தையா பாலசுந்தரம் ஆச்சாரியார் 24.08.2003 ஞாயிற்றுக்கிழமை விஸ்வபதம் எய்தியுள்ளார்.

அன்னார் முருகேசு கந்தையா மாணிக்கத்தின் ஏக புத்திரனும் செல்லம்மாவின் பாசமிகு தம்பியும் அம்மன் வீதி, சில்லாலை பண்டத்தரிப்பைச்சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்னுச்சாமி பாக்கியத்தின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் திருவருட்செல்வி, கிருபைராஜா (டோகா), செந்தூரச்செல்வி (மன்னார் பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கருணாகரனின் (லிபியா) அன்பு மாமனாரும் குணப்பிரசாத்தின் பாசமிகு பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2003) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பொன்னுச்சாமி குடும்பத்தினர்.

*தோணிக்கல்,*
*வவுனியா.* (¢ 29821)(12-17)

## முருகுப்பிள்ளை நாகராஜா

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை நாகராஜா நேற்று (27.08.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் யோகம்மாவின் அன்புக் கணவரும் விக்னேஸ்வரன், யோகபாலன், ரஞ்சிதமலர், சிவசெல்வராசா, ஜெயமலர், யோகராசா, கௌரிமலர், வரதராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் திலகவதி, புவனேஸ்வரி, புவனசுந்தரம், நிறஞ்சனா, கோணேஸ்மூர்த்தி, திருமலர், சாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

*6ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (21992)(12-17 - 32)

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1970 - 06 - 30

உதிர்வு 1992 - 08 - 29

## அமரர் பாக்கியதுரை உதயகுமார் (உதயன்)

ஆண்டுகள் அகன்றாலும்
அகலாத நினைவுகளாய்
உன் ஞாபகங்கள் எம்முள்
அலை மோதுதடா!
இல் வாழ்வில் இணைந்திட்ட - உன்
உடன் பிறப்பெல்லாம்
நீயும் இருந்திருந்தால்.... என,
கண்களை நிறைக்கின்றோம் - இல்லை
அங்கே நீயும் உன் காதலியுடன்
கலந்திருப்பாய் என கண்ணீர் துடைக்கின்றோம்.
ஆண்டுகள்தான் அகலும் - அகலாது
உன் ஞாபகங்கள் எம் நெஞ்சைப் பிழிந்திட
நித்தம் நித்தம் தவிக்கின்றோம்
சதிதான் உனக்கு விதியாய் என
சாமியிடம் கேட்கின்றோம்.
சத்தியம் வெல்லுமென சாந்தி கொள்கிறோம்.

உன் பிரிவால் துயருறும்,
- உன் குடும்பத்தினர்.

*மானிப்பாய்.* (21941) (32-12-17)

# மரண அறிவித்தல்

## நட்சத்திரம் டானியல் (செட்டியார்)

தென்கோப்பாயைப் பிறப்பிடமாகவும் மல்வம், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நட்சத்திரம் டானியல் நேற்று (27-08-2003) புதன் கிழமை காலை காலமானார்.

அன்னார் பூரணத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற றோசலினின் (கனகம்மா) சகோதரனும் செபரட்னம், குணரட்னம் (லண்டன்), நவரட்னம் (குவைத்), ஜெயரட்னம், தவநாயகி, விஜயரட்னம் (குவைத்), பிறேமறூபி (கொலன்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகமலர், தவராணி, நாகேஸ்வரி, லூட்ஸ்செல்வராணி, செல்வராஜா, லூட்ஸ் நெக்சிடா, ஆனந்தபாஸ்கரன் (கொலன்ட்) ஆகியோரின் மாமனாரும், குனாளராஜா, எடிசன் (குவைத்), எமர்சன், ஜெலிமா, தனுசன், நிலானி (ஆசிரியர், தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை), நிலாந்தி, நிலோஜன், நிருபா, எமில்டா, கொலின்ஸ், றேமன் (ஜனசக்தி இன்சூரன்ஸ் முகவர்), கொன்சிஸ்டா, மெயின்சன், டிக்சன், குயின்ரஸ், டெனிஸ்ரன், நெலோமி, ஜீனா, டொரன்ரா, சயானி, ஜெராட்நெக்சன், திவ்விஜன், அனோஜன் (கொலன்ட்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இன்று காலை 10 மணிக்கு திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டா.விஜயரட்னம் (மகன்).

*மல்வம்,*
*உடுவில்.* (21944) (12-17-32)

# ௯௦ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 - 05 - 1955



மறைவு 30 - 05 - 2003

## அமரர் ஆறுமுகம் சிவபாதம்

(நீர்வேலி தெற்கு)

காலமெலாம் உதவுவாயென்றே கனவு கண்டோமே
கனவெல்லாம் தவிடுபொடியாச்சுதே ஐயா!
மாளவென்றோ வீட்டைவிட்டு நீங்கள் சென்றீர்கள்
செய்வதறியாமல் செய்தாரோ பாவியர்கள்
நீர் மடிந்து நாள்கள் தொண்ணூறு சென்றதுவே
எமக்கிங்கு துணையாக யாருளரோ?

பச்சிளம் பாலகர்கள் அப்பாவைத் தேடி நிற்க
வகையென்ன கூறவென்றே தெரியவில்லை.
மடியிருத்திக் கொஞ்சும் பருவக் குழந்தைகள்
இடி விழுந்த மரம் போலத் தவிக்கின்றாரே!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

(21938) (22-32-16)

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித்குமார் (இருவேடம்), சிம்ரன், விவேக் நடித்த
வாலி
காட்சி நேரம்: 11.00, 3.00 (பு.நே.)
JUDGE & JURY
தினசரி 7.00
அடுத்த வெளியீடு
(31-12-18) (C29232)

நிறஞ்சனாஸ் சங்கானை
இன்று மட்டும்
சிறிகாந், த்ரிஷா நடித்த
மனசெல்லாம்
தினசரி காட்சி : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
(C29213) (31-12-18)

லஷ்சுமி சினிமா இணுவில்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
(ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்).
(21821)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று கடைசித்தினம்
விஜயகாந்த், கிரண், விவேக் நடித்த
தென்னவன்
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
நாளை முதல்
பாய்ஸ்
(C29238)

லிபேட்டி அச்சுவேலி
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
பரசுராம்
(ரீல்ஸ்)
தினசரி காட்சி: 3.00. 7.00
காலை 11.00 மணிக்கு Red Scorpion
(C29313)

# வடக்கு - கிழக்கு நீதிமன்றங்களுக்கு அமெரிக்கா கணனிகள் அன்பளிப்பு

வடக்கு - கிழக்கு நீதிமன்றங்களுக்கு அமெரிக்கா கணனிகளையும் பிறிண்டர்களையும் மற்றும் கணனி உபகரணங்களையும் வழங்கி உதவ இருக்கிறது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க ஏஜென்ஸியின் இந்த உதவித் திட்டம் பற்றி அமெரிக்கத் தூதரகப் பொறுப்பதிகாரி ஜேம்ஸ் எவ். என்ற்விசில், பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனைச் சந்தித்துத் தகவல் தெரிவித்தார்.

வடக்கில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, மல்லாகம், பருத்தித்துறை, வவுனியா, மன்னார் நீதிமன்றங்களுக்கும் -

கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை, அக்கரைப்பற்று, கல்முனை, திருகோணமலை, மூதூர் ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கும் உதவி வழங்கப்பட இருக்கிறது.

கணனிகள், பிறிண்டர்கள், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்குமான சொற்செயலி மென்பொருள், கணனிகளுக்கு தடங்கலின்றி மின்சாரம் கிடைப்பதற்கான யு.பி.எஸ். ஏற்பாடுகள், பசிமெயில் இயந்திரங்கள், ஜெனரேட்டர்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் ஆகியனவும் மேற்படி நீதிமன்றங்களுக்கு வழங்கப்படவுள்ளன என்று அமெரிக்கத் தூதரகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ம)

# விபத்தில் உயிரிழந்தவர் குடும்பத்துக்கு இழப்பீடு!

யாழ்ப்பாணம்,ஓக.28

வட்டுக்கோட்டைப் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் இடையே இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த முன்னாள் பிரதேச செயலரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினருமாகிய க.சந்திரராசாவின் குடும்பத்துக்கு 2லட்சம் ரூபா இழப்பீடாக வழங்குமாறு யாழ்.நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இது தொடர்பான வழக்கு நேற்று யாழ்.நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்திரராசாவை மோட்டார் சைக்கிளினால் மோதியதாகக் கூறப்படும் நபர் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டார். எனினும், அவர் ஒரு பாடசாலை மாணவன் என்ற காரணத்தினாலும் - அவரது கல்வியையும், எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டும் அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தை இரண்டு வருடங்களுக்கு நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறும் உத்தரவிட்ட யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இறந்தவரின் குடும்பத்துக்கு 2 லட்சம் ரூபா நஷ்டஈடாகச் செலுத்துமாறும் பணித்தார்.

அத்துடன், அரச செலவாக ஐயாயிரத்து 500 ரூபாவை நீதிமன்றத்துக் செலுத்துமாறும் நீதிவான் தனது பணிப்பில் தெரிவித்தார். (எ-8)

## பிரதமர் 9ஆம் திகதி மலேசியாவுக்கு விஜயம்

கொழும்பு,ஓக.28

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 9ஆம் திகதி இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு மலேசியா செல்வார்.

இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக, முதலீட்டுத்துறைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திலேயே பிரதமர் இவ்விஜயத்தை மேற்கொள்கிறார்.

இதற்கிடையே, மலேசிய முதலீட்டாளர்களைக் கவருவதற்காக இலங்கை வர்த்தகத் தூதுக்குழு ஒன்றுடன் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று மலேசியாவுக்குச் செல்லவிருந்தார். (எ)

## கொழும்பில் நேற்று 88 பேர் கைது!

கொழும்பு,ஓக.28

பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து கொழும்பில் நடத்திய தேடுதல்களில் நேற்று மட்டும் சந்தேகத்தின்பேரில் 88 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கொழும்புப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் அலுவலகம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

நேற்றுக்காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 161 வீதித் தடைகளும், 137 ரோந்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-12-8)

## கொழும்பில் ரூபா 9 லட்சம் பெறுமதியான ஹெரோயின் சிக்கியது

கொழும்பு,ஓக.28

கொழும்பு, மாதம்பிட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த 9 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் ஒழிப்புப் பொலீஸ் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தக் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்ததாகச் சந்தேகிக்கப்படும் பெண் ஒருவரை நேற்று அதிகாலை கைது செய்ததாக பொலீஸார் தெரிவித்தனர். கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் எடை 308 கிராம் என போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி அமரஜித் சில்வா தெரிவித்தார். (ம)

## கண்காணிப்புக் குழு தலைவர் இன்று மட்டு. விஜயம்

கொழும்பு,ஓக.28

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரிக்வே ரெலிவ்சன் இன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மடடக்களப்பில் உள்ள அரசியல் நிலைவரம் குறித்து ஆராயவே அவர் அங்கு செல்லவுள்ளார்.

இவர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், படைத்துறை அதிகாரிகள், போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் முதலானோருடன் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-12)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் எழுப்பப்பட்டன. 'நுஆ' தலைவியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேரியல் அஷ்ரப்பும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டார். (எ)

*(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)*

## இளநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய அதிகாரியின் உதவியுடன் பிரேத பார்சோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் -

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் - நீதிவான் உத்தரவிட்டார். (எ-117)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீகரித்ததும் சொல்ஹெய்ம் மூலம் வரைவு அரசுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

இப்பேச்சுக்களுக்கு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமைவகித்தார். பேச்சுக்களில் கலந்துகொண்ட ஏனையோர் வருமாறு:-

புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் விசேட தளபதி கேணல் கருணா, பொருளாதார ஆலோசகர் டாக்டர் ஜே.மகேஸ்வரன், சிரான் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைப் பேராசிரியர் சொர்ணராஜா, மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் பி.ராமசுவாமி, சிட்னிப் பல்கலைக்கழகத்தின் சட்டப் பேராசிரியர் டாக்டர் மனுவேற்பிள்ளை போல் டொமினிக், இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி, சட்ட ஆலோசகர் விஸ்வேந்திரன், புலிகளின் சட்ட விவகார ஆலோசகர் வி. உருத்ரகுமார்.

பாரீஸ் பேச்சுக்கள் கடந்த 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெற்றன.

வாழைச்சேனையில்

# புலிகளின் பகுதிக்குச் செல்ல இராணுவ அனுமதி தேவை!

மட்டக்களப்பு,ஓக.28

வாழைச்சேனைப் பகுதியில் உள்ள வடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் செல்லும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இராணுவம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

கடந்த இரண்டு தினங்களாக அப்பகுதிக்குச் சென்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களை சேர்ந்தவர்களின் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

வடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு செல்வதற்கு இராணுவத்திடம் அனுமதி பெறவேண்டும் என காவற்கடமையில் இருந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் பகுதிக்கு செல்ல முயற்சித்த அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகளிடம் கூறியுள்ளனர். நேற்று இவ்விடயம் பற்றி மட்டக்களப்பு இணைபதிகாரியிடம் முறையிட்டதையடுத்து இன்று சந்திப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம)

## தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்பிக்கள் தமது ஆட்சேபனையைப் பிரதமரிடம் தெரிவித்தனர்.

முன்னர், முஸ்லிம் ஊர்காவல் படைக்கு இனரீதியில் ஆள்கள் சேர்க்கப்பட்டனர். அதனால் ஏற்பட்ட விளைவுகள் பற்றியும் கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமருக்கு எடுத்துக் கூறினர்.

முஸ்லிம் பிரதேசங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டுமானால் மற்ற இடங்களிலிருந்து மேலதிக பொலீஸாரை அப்பகுதிகளுக்கு அனுப்பலாம். அதைவிடுத்து முஸ்லிம இளைஞர்களை பொலீஸில் இணைத்துக்கொள்வதால் மேலும் பிரச்சினைக்கு தூபமிட்டதாகவே அது அமையும் எனவும் தெரிவித்தனர்.

பாதுகாப்புப் பற்றி முஸ்லிம் மக்களின் ஆதங்கங்கள் எமக்கு நன்றாகப் புரியும். பொலீஸுக்கு ஆளகளைச் சேர்ப்பது அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஆகாது. முஸ்லிம் இளைஞர்களை பொலீஸுக்கு சேர்ப்பதில் அரசு காட்டும் அக்கறைபற்றி தமிழர் தரப்பில் சந்தேகம் எழுந்துள்ளது.

கிழக்கில் தொடர்ந்தும் பிரச்சினைகள் இடம்பெறாதிருக்கவேண்டுமானால் தமிழ் - முஸ்லிம் உறவுகளைப் பலப்படுத்த இருதரப்பினரும் இணைந்து செயற்படவேண்டும் எனவும் தமிழ் கூட்டமைப்புத்தரப்பில் வலியுறுத்தப்பட்டது என்று கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்கூட்டமைப்பு எம்பி ஒருவர் தெரிவித்தார்.

**முஸ்லிம் தரப்பின் வாதம்**

கிழக்குமாகாணத்தில் பொலீஸுக்கு ஆளசேர்ப்பு நடவடிக்கை கைவடப்படமாட்டாது. பொலீஸில் தேசிய ரீதியாக 12ஆயிரம் வெற்றிடங்கள் இருக்கின்றன. அதன் ஓர் அங்கமாகவே 550 பொலீஸார் கிழக்கு மாகாணத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் என அரசு தரப்பில் தெரிவிக்கபபட்டுள்ளது. என்று பிரதமருடனான பேச்சில் கலந்துகொண்ட முஸ்லிம் எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இடைக்கால நிர்வாக சபை ஒன்று ஏற்படுத்தப்படும்போது அதன் நிர்வாகத்துக்குள் இந்தப் பொலீஸ் ஆள் சேர்ப்பு உள்வாங்கப்படமாட்டாது. மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்க உறுதியளிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு என்பது அரசின் கையிலேயே தங்கியுள்ளது.

முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதத்தை அரசே வழங்கவேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

எனினும், தமிழ் - முஸ்லிம் உறவைப் பலப்படுத்தும் பணியில் இரு தரப்பினரும் இணைந்து செயற்படவேண்டும் என்று இணக்கம் காணப்பட்டது.

- இப்படி அந்த முஸ்லிம் உறுப்பினர் கூறினார்.

**உள்துறை அமைச்சு அறிக்கை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களும் முஸ்லிம் எம்.பிக்களும் பிரதமருடன் நடத்திய பேச்சுப் பற்றி உள்துறை அமைச்சின் செயலாளர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- கூட்டத்தில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, பொருளாதார சீர்திருத்த அமைச்சர் மிலிந்த மொறகொட, துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் - முஸ்லிம் எம்.பிக்கள் கலந்துகொண்டனர்

அலரி மாளிகையில் கூட்டம் நடந்தது. கிழக்கின் பாதுகாப்பு சட்ட ஒழுங்கு நிலைமை, அவற்றை நிலைநாட்டுவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை பற்றி ஆராயப்பட்டது. கிழக்கில் சமூக ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு தேவையான சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம் என்று எல்லோரும் ஒருமனதாக கருத்துத் தெரிவித்தனர்.

கிழக்கு நிலைமைகளை மேலும் பரிசீலனை செய்வதற்கு செப்ரெம்பர் 8ஆம் திகதி மீண்டும் பிரதமர் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

- இப்படி உள்துறை அமைச்சின் செயலாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ம)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பேற்றுள்ளனர்.

இந்த விகாரை சர்வமத மத்திய நிலையமாகவே அமையும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன அவரது அமைச்சில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.





GANESAN CENTER
மங்களகரமான திறப்பு விழா

எல்லாவிதமான நவீன ஆடைகள், பட்டுப் புடைவைகள், வேஷ்டிகள் மற்றும் அழகுசாதனப் பொருள்களுக்கு தனித்துவமான வியாபார நிறுவனமாக இணுவில் துரை வீதியில் செயற்பட்டு வரும் **கணேசன் சென்ரர் (பௌவும் கடை)** வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத் தொகுதியொன்றை நாளை (29.08.2003) வெள்ளிக்கிழமை காலை 7.30 - 10.30 மணி வரையிலுள்ள சுபவேளையில் K.K.S வீதியில் (இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாக) திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:
து.சிவகுமாரன்
கணேசன் சென்ரர்.
(21940) (32)

தென்னிந்தியாவில் இருந்து

யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



ராஜகுருசாமி அவர்கள்

யாழ்.மக்களுக்கு ஒரு வேண்டுகோள்!
சோதிடர் வரும் 01.09.2003 முதல் 10.09.2003 வரை மட்டுமே தங்கவுள்ளார். ஆகவே, ஜாதகம் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும்.
தாயகம் செல்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

(29-16) ராஜகுருசாமி T.P. 5867
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.
(21768)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
A/L DAY CLASS
கணித, உயிரியல் பிரிவு
ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
PHY. திரு.ஜெயசீலன்
CHE. திரு.பவான்
C.Maths திரு.ஐங்கரன்
BIO. திரு.ஞானேந்திரன்
(21902)(12-16)

BRIGHTMAN
நாவலர் வீதி (கிளைநிறுவனம்), யாழ்நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
★ By:லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம் : 30.08.2003
Sat . 8.30
(21903) (12-16)

விசேட கருமபீடம்

இலங்கை வங்கியின் 64வருட சேவை நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் போது ஒரு விசேட கருமபீடம் அமைக்கப்படவுள்ளது.

இன்று 28.08.2003 முதல் 08.09.2003 வரை செயற்படவுள்ள இக்கருமபீடம் இலங்கை வங்கி யாழ்.பிரதேச முகாமையாளர் திரு.சி.நடராசலிங்கம் அவர்களால் இன்று வியாழக்கிழமை 9.30 மணிக்கு திறந்துவைக்கப்படும்.

இக்கருமபீடத்தில் சகல சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பாக இங்கு ரூ.10,000/= வைப்புச் செய்து ஆரம்பிக்கப்படும் 18+ இளைஞர் சேமிப்புக் கணக்குகளுக்கு மாபெரும் சீட்டிழுப்பு ஒன்று நடத்தப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

முகாமையாளர்
இலங்கை வங்கி
காங்கேசன்துறை கிளை,
மல்லாகம்.

இலங்கை வங்கி
என்றும் உங்கள்
தேவைகளை நிறைவேற்றும்.
(21934) (12-16)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தீவிரவாதத்துக்கு உதவும் சவூதி மீது அமெரிக்கா கரிசனம் காட்டுவதேன்?

சமீபத்தில் ஒரு நாள் 'பிரிட்டிஷ் எயர்வேய்ஸ்' விமான சேவை நிறுவனம் சவூதி அரேபியாவுக்கான தரையிறக்கவிருந்த தனது விமானங்களை ரத்துச் செய்வதாக அறிவித்ததும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், வளைகுடாப் பிராந்திய நாடுகளில் சுற்றுலா மேற்கொண்டிருக்கும் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கப் பிரஜைகள் தமது பாதுகாப்பில் விசேட கவனம் செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்ததும் சவூதி அரேபியாவின் பாதுகாப்பு நிலைமை திருப்திகரமாக இல்லையென்பதைத் தெளிவாக காட்டியது. சட்டமும் அமைதியும் சிறப்பான வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சவூதி அரேபியாவின் தலைநகர் 'ரியாத்'தில் கடந்த மே மாதத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் அந்நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான நிச்சயமற்ற தன்மை உருவாகவும் எப்போதும் அங்கு நிலவி வந்த சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான விரிசல்கள் தோன்றவும் காரணமாக அமைந்தன. 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிகாவின் உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீதும் 'பென்ரகன்' கட்டடத்தின் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து சவூதி அரேபியாவின் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் பெருமளவில் அதிகரித்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்தது.

சவூதி அரேபிய அரச குடும்பத்துடன் அமெரிக்கத் தலைவர்கள் பேணிவரும் நெருக்கமான உறவு காரணமாக 'அல்கெய்டா' அமைப்புக்கு உதவியும் ஆதரவும் வழங்குவது தொடர்பாக மற்றைய நாடுகள் மீது அமெரிக்கா சுமத்தும் குற்றச்சாட்டை சவூதி அரேபியா மீதும் சுமத்த முடியவில்லை. செப்ரெம்பர் 11 ஆம் திகதிய தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைது செயப்பட்ட 19 பேரில் 15 பேர் சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர்கள் என்பதால் வேறொரு கோணத்தில் அது பாரதூரமான விடயமாக அமைந்த போதிலும், அது அமெரிக்காவுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையேயான உறவில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. சவூதி அரேபியாவில 'அல்கெய்டா' அமைப்பினரெவரும் இயங்கவில்லை என்ற சவூதி அரேபியாவின் அறிவிப்பு அமெரிக்காவுக்குத திருப்தியளித்தது. ஆனால், இவ்வாண்டு மேமாதம் 12ஆம் திகதி இடம பெற்ற தாக்குதல் சம்பவத்தின் பின்னர் சவூதி அரேபியாவில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகளின் போது 200 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், 'அல்கெய்டா' அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் குழுவொன்றுடன் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட நேர்ந்ததாகவும் தெரிய வந்துள்ளது. பிரிட்டிஷ் விமான சேவை நிறுவனம் சவூதி அரேபியாவுக்கான தனது சேவையை இரத்துச் செய்யும் அறிவிப்பை வெளியிடுவதற்கு இரு நாள்களின் முன்னர், பயங்கரவாதிகள் சிலரைத் தாம் கைதுசெய்துள்ளதாக சவூதி அரேபியா தெரிவித்திருந்தது. பிரிட்டிஷ் விமானத்தின் மீது தாக்குதல் மேற்கொள்வதே அப்பயங்கரவாதிகளது இலக்காகும் எனச் செய்தி நிறுவனத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

எவ்வாறாயினும், தற்போதைய நிலைமையின் படி சவூதி அரேபியாவில் பயங்கரவாத அமைப்புக்கள் இயங்கி வருவதாக அந்நாட்டு ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளக் கூடியதாயுள்ளது. அத்தோடு, அவ்வமைப்புக்களை முற்று முழுதாக ஒழித்துக் கட்டவதற்கு ஆட்சியாளர்கள் முக்கியத்துவம் அளித்து வருவதும் தெளிவாகியுள்ளது. அண்மையில் சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசனான அப்துல்லா வெளியிட்ட கருத்து, செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்கத் தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி புஷ் வெளியிட்ட கருத்தையே பெரும்பாலும் ஒத்திருந்தது. 'சமீப நாள்களாக எமது சொத்துக்கள் போன்ற இந்நாட்டுப் பொதுமக்கள் கடும் போக்கடைய குரூரம் நிறைந்த பயங்கரவாதிகள் என்போர் அங்கம் வகிக்கும் பாவம் மிக்கதும் அழிவைத் தருவதுமான அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். அவ்வித அமைப்புகள் கேடு விளைவிப்பவை என்பதோடு, அவர்களது இவ்வித நடவடிக்கை காரணமாக நாம் சமரச நடவடிக்கை மேற்கொள்ளவோ அல்லது பின்வாங்கவோ போவதில்லை. அதுபோன்று இந்தத் தீர்க்கமான யுத்தத்தில் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிக்கும் எவரும் எவ்வித உதவியையும் நமது அரசிடமிருந்து பெறமுடியாது என இளவரசர் அப்துல்லா கருத்துத் வெளியிட்டிருந்தார்.

செப்ரெம்பர் 11ஆம் திகதிய தாக்குதலுக்கு காரணம் குறித்து ஆராய்ந்த அமெரிக்கக் காங்கிரஸ் சபையால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் அத்தாக்குதலில் சவூதி அரேபியாவைச் சேர்ந்தோரின் தொடர்பு குறித்து வெளியிடப்பட்டுள்ள விடயங்களே சவூதி அரேபியாவில் அரசியல நிலைமை தீவிரமடையக் காரணமாகும்.

'அல்கெய்டா' அமைப்பின் சில உறுப்பினர்களுடன் சவூதி அரேபிய அரச குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பு வைத்துள்ளனர் என்பது பற்றி அமெரிக்கா அறிந்திருந்தபோதிலும் அது தொடர்பாக கடும் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள புஷ்ஷின் அமெரிக்க நிர்வாகம் முயற்சிக்காதமைக்கும் காரணம் உள்ளது. சவூதி அரேபியாவின் எண்ணெய் வளம் அமெரிக்கப்



பொருளாதாரத்துக்கு மிக அவசிய தேவையாயுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கதொரு விடயமாகும். அமெரிக்காவின் தேவையின் நூற்றுக்கு 18 சதவிகிதமான சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெயை சவூதி அரேபியா வழங்கி வருவதால் இவ்விநியோகம் திடீரெனத் தடைப்பட்டால் அது அமெரிக்காவின பொருளாதாரத்துக்கு ஏற்படுத்தும் அழுத்தம் இலேசானதாக அமையாது. இந்த இக்கட்டான நிலைமையை உணர்ந்த அமெரிக்கா, சில வருடங்களுக்கு முன்பிருந்தே வேறு சில வழிகளில் எண்ணெயைக் கொள்வனவு செய்ய முயன்றதன் காரணமாக சில தசாப்தங்களுக்கு முன்னர் சவூதியிலிருந்து பெற்ற எண்ணெய் அமெரிக்கத் தேவையின் 28 சதவிகிதத்தைப் பூர்த்தி செய்து வந்த நிலைமையைக் கட்டுப்படுத்திக் குறைத்துக் கொள்ள அமெரிக்காவுக்கு முடிந்தது. ஆயினும், நாளொன்றுக்கு 20 லட்சம் பரல் சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெயை உற்பத்தி செய்யும் ஒரே நாடாக சவூதி அரேபியா விளங்குவது இங்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயமாகும்.

உலக சந்தையில் எண்ணெய் விலையை நிர்ணயிக்கும் சவூதி அரேபியா பல சந்தர்ப்பங்களில் உலக சந்தையில் எண்ணெய் விலையை பேணிவருவதற்கு உதவியுள்ளது. 1974 ஆம் ஆண்டில் எண்ணெய் உற்பத்தியை மட்டுப்படுத்துவதென 'ஒபெக்' நாடுகள் தீர்மானித்ததையடுத்து எண்ணெய் விலை உயர்வடைந்தது. அவ்வேளையில், சவூதி அரேபியா தனது எண்ணெய் உற்பத்தியை அதிகரித்ததன் மூலம் அமெரிக்காவுக்கு பெருமளவில் உதவியது. அத்துடன் - ஈராக் யுத்தத்தின் போதும் 1990 - 91 காலப்பகுதியில் இடம்பெற்ற வளைகுடா யுத்தத்தின் போதும் மீண்டும் ஒரு தடவை மேற்கு நாடுகளுக்கான எண்ணெய் விநியோகத்தில் தட்டுப்பாடு நிலவாமல் பார்த்துக் கொண்டது. வளைகுடா யுத்தத்தின் போது ஈராக் மற்றும் குவைத் ஆகிய இரு நாடுகளும் எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்திக்கொண்ட போதிலும், சவூதி அரேபியா, வளைகுடாவின் வேறு சில நாடுகளின் ஆதரவுடன் நாளொன்றுக்கு 50 லட்சம் பீப்பாய்கள் என்ற விகிதத்தில் எண்ணெய் உற்பத்தியை அதிகரித்துக் கொண்டது.

கடந்த நூறு வருட இடைவெளியில அமெரிக்காவுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையேயான வர்த்தக நடவடிக்கைகளின் முன்னேற்றமானது இவ்விரு நாடுகளுக்கு இடையிலான நெருங்கிய தொடர்புகளுக்கு உதாரணமாக அமைகின்றது. இரு நாடுகளுக்கும் இடையே 1950 ஆம் ஆண்டில் 5.6 கோடி டொலர் பெறுமதியான வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. இது 2000 ஆம் ஆண்டில் 1930 கோடி டொலராக அதிகரித்தது. சவூதி அரேபியா உலக சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்கக் குறைந்த விலைக்கே அமெரிக்காவுக்கு எண்ணெய் விநியோகம் செய்து வந்தது. அதேவேளை, அமெரிக்கா சவூதி அரேபிய நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்து வந்தது. இஸ்ரேல் நாட்டுக்கு மட்டுமே விற்பனை செய்துவந்த நவீன ரக யுத்த ஆயுதங்கள் மற்றும் நிர்மாணப்பணி, தொலைத்தொடர்பு சேவைகள், எண்ணெய் சேகரிப்பு தொடர்பான உபகரணங்கள் ஆகியவற்றை அமெரிக்கா, சவூதி அரேபியாவுக்கும் விற்பனை செய்தது. இது சில விமர்சகர்களால் "மீள் சக்கர முறைமை" என விமர்சிக்கப்பட்டது. அதாவது, எண்ணெய் கொள்வனவுக்கென அமெரிக்கா செலுத்தும் பணத்தை இவ்வித வர்த்தக நடவடிக்கைகள் மூலம் மீண்டும் அமெரிக்காவுக்கே கொண்டு வருதல் என்ற வகையான நடவடிக்கையாகும். முற்றுமுழுதான அரசியல் நோக்கம் கொண்டது. சவூதி அரேபியாவுடன் லாபகரமான வர்த்தக நடவடிக்கையை மேற்கொண்டு வரும் 'கார்லூயில்' கூட்டு வியாபார நிறுவனம் இதற்குச் சிறந்த உதாரணமாகும். 1993- 2002 இடைப்பட்ட காலப்பகுதியில் இதன் தலைவராகப் பதவி வகித்த 'பிறாங்க கார்லூசி' முதலில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகக் கடமையாற்றியவராவார். அந்நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகரான ஜேம்ஸ் பேக்கர் தற்போதைய ஜனாதிபதி புஷ்ஷின் தந்தையார் ஜனாதிபதியாக இருந்த வேளையில் அரசுச் செயலாளராகக் கடமையாற்றியவராவார். தற்போதைய அமெரிக்க உப ஜனாதிபதி 'டிக் செனி'க்குச் சொந்தமான 'ஹலிபேர்டன்' நிறுவனமும் சவூதி அரேபியாவுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும்.

இவை காரணமாக மற்றைய அரேபிய நாடுகளைவிட சவூதி அரேபியா மீது அமெரிக்கா விசேட கரிசனை காட்டி வருகின்றது. செப்ரெம்பர் 11 ஆம் திகதி சம்பவம் இடம்பெறும் வரையில் அமெரிக்காவினுள் நுழைவதற்காக மற்றைய மத்திய கிழக்கு நாடுகள் மீது விதிக்கப்பட்டு வந்த பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள் எவையும் சவூதி அரேபிய பிரஜைகள் மீது விதிக்கப்படவில்லை. தலைநகா 'றியாத்' மற்றும் 'ஜெட்டா' ஆகிய நகரங்களிலுள்ள அமெரிக்கத் தூதராலயங்களில் அமெரிக்க விசா அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக ஆகக் குறைந்தது சவூதி அரேபிய பிரஜை ஒருவர் அக்காரியாலயத்துக்கு நேரில் வரவேண்டுமென்ற விதிமுறை கூடக் கடைப்பிடிக்கப்படவில்லை. சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யும் பிரதிநிதியொருவா மூலம் சவூதி அரேபியப் பிரஜையொருவர் தனது கடவுச்சீட்டு விசா அனுமதி விண்ணப்பம் மற்றும் அதற்கான கட்டணம் என்பவற்றைச் செலுத்துவதன் மூலம் 24 மணி நேரத்துள் எவ்வித சிரமமுமின்றி அமெரிக்க விசாவைப் பெற்றுக்கொள்ளும் வசதி வழங்கப்பட்டு வந்தது. கடவுச்சீட்டு வைத்திருக்கும் சவூதி அரேபியப் பிரஜையொருவர் அமெரிக்கா செல்வதற்கான 'விசா' அனுமதியைப் பெற்றுக்கொள்வதில் எவ்வித சிரமமும் இருக்கவில்லை. சவூதி அரேபிய அரசு குற்றங்களுக்காக விதிக்கும் குரூர தண்டனைகளினால், எந்தவொரு சவூதி அரேபிய பிரஜையும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடவோ அல்லது அவ்வித நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கவோ முன்வரக்கூடுமென்ற சந்தேகம் அமெரிக்காவுக்கு இருக்கவில்லை. சவூதி அரேபிய அரசு சகல மட்டங்களிலும் பயங்கரவாதம் தலையெடுக்க விடாத வகையில் பொறுப்புடன் நடந்து கொள்வதாகவே அமெரிக்கா கருதி வந்தது.

சவூதி அரேபிய அரச குடும்பம் கைக்கொள்ளும் முஸ்லிம் மதப்பிரிவான 'வஹாப் பிரிவு' மற்றும் அவர்களது வாழ்க்கைமுறை என்பன ஒன்றுக்கொன்று ஒத்துப்போகும் தன்மை கொண்டவையல்ல. ஆனால், முஸ்லிம் அடிப்படைவாதிகள் வஹாப் மதப்பிரிவு தொடர்பான கல்விவசதிக்காக வழங்கும் ஆதரவு எதனையும் கைவிட முடியாது. சவூதி அரேபிய அரச குடும்பம், வஹாப் மதப்பிரிவின் மீதுள்ள தமது நம்பிக்கையை வெளிப்படுத்தும் நோக்கத்துக்காக, எந்தவொரு முஸ்லிம் அடிப்படைவாத மத அமைப்பாக இருப்பினும், அவற்றுக்கு பண உதவி புரிவதன்மூலம் தமது தியாக மனப்பான்மையை வெளிப்படுத்தி வந்தனர். அதன்படி, 'அல்கெய்டா', மற்றும் 'தலிபான்' போன்ற மதவாத அமைப்புக்களுக்கு மட்டுமன்றி, அந்த அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணிவந்த பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்களுக்கும் சவூதி அரேபிய அரச குடும்பத்தினர் உதவி வந்தனர். அண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி, கடந்த இரு தசாப்த காலத்தில் சவூதி அரேபிய அரசால் 'அல்கெய்டா' அமைப்புக்கு 50கோடி டொலர் உதவி வழங்கப்பட்டுள்ளது. 'பெற்றோலியம் இன்ரெலிஜன்ஸ் வீக்லி' சஞ்சிகையின் தகவல்களின்படி 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் முதற்றடவையாக நாளொன்றுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் எண்ணெய் பீப்பாய்கள் ஆப்கானுக்கும் பாகிஸ்தானுக்கும் சவூதி அரேபியாவினால் வழங்கப்பட்டது தெரியவருகின்றது. இவ்விவரங்கள் உத்தியோகபூர்வ செய்திகளாக வெளியிடப்படுவதில்லை. அதே போன்று பாகிஸ்தானின் ஏவுகணைத் திட்டத்துக்கு 1994 ஆண்டு முதல் சவூதி அரேபிய அரசு பண உதவி வழங்கி வந்துள்ளதாக அமெரிக்க மத்திய உளவுப்பிரிவும் அறிந்திருந்தது.

நோய்வாய்ப்பட்ட நிலையிலுள்ள சவூதி அரேபிய மன்னர் 'பாஹிட்' இன் பின்னர் அரச பதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பாஹிட் மன்னரது மகனான அப்துல் அஸீஸ், முடிக்குரிய இளவரசரான இளவரசர் அப்துல்லாவை 'வஹாப்' மதத் தலைவர்களின் ஆதரவுடன் தோற்கடிக்கச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துள்ளார். புதிதாக அரசரொருவரை நியமிக்கும் வேளையில் சம்பிரதாய முறை கடைப்பிடிப்பதைத் தவிர்த்துச் செயற்படுவதாயின் அப்துல் அஸீஸ் அப்பதவிக்கு நியமிக்கப்படவேண்டும். இதன் காரணமாக அவர் சவூதி அரச குடும்பத்தை அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்போவதாக பயமுறுத்திய பின்லேடனுக்கு அடைக்கலம் வழங்கிய தலிபான் அமைப்புக்கு 1997 செப்ரெம்பரில் 10 கோடி டொலர் உதவி பெற்றுக்கொடுக்கும் வகையில் செயற்பட்டார். அதுவுமன்றி, அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இயங்கும் முஸ்லிம் மத அமைப்புக்களுக்கு சவூதி அரேபிய அரசிடமிருந்து நிதி உதவி பெற்றுக்கொடுப்பதில் சம்பந்தப்பட்டவரும் இந்த 'அப்துல் அஸீஸ்'யாகும். அமெரிக்க மத்திய புலனாய்வுச்சேவை மூலம் அண்மையில் தயாரிக்கப்பட்டதோர் அறிக்கையின் பிரகாரம், செச்சினியாவில் ரஷ்ய ஆட்சியாளர்களுக்கு எதிராக முஸ்லிம் மதவாதிகள் மேற்கொண்ட ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்த அமைப்புக்களுக்கும் 'அப்துல் அஸீஸ்' உதவி வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளது. சவூதி அரேபிய அரச குடும்ப அங்கத்தினர்கள் இவ்விதம் அரச வரவு - செலவு நடைமுறைகளுக்குப் புறம்பான விதத்தில் பெரும்தொகை நிதியை வெவ்வேறு மதம் மற்றும் நலன்புரித்திட்டங்களுக்கு வழங்கி வருவது சவூதி அரேபியாவினுள் தமது நிர்வாகத்துக்குப் பாதிப்பு ஏற்படாது பார்த்துக்கொள்ளும் நோக்கிலேயாகும் என சில விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆனால், சவூதி அரச குடும்பம் தமது அரச நிர்வாகத்தை தொடர்ந்து பேணிவருவதற்காக எண்ணெய் வளம் மூலம் கிடைக்கும் நிதியை அளவு கணக்கின்றிச் செலவிடும் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை உருவாகும்போல் தெரிகிறது.

1996 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 'அல்கோபரில்' இடம்பெற்ற குண்டு வெடிப்பின் மூலம் இதற்கான முதலாவது சமிக்ஞை விடப்பட்டது. அமெரிக்க வர்த்தக நடவடிக்கையை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்மூலம் சவூதி அரேபிய நாட்டினுள்ளும் மதவாத குழுவினர் செயற்படுவதாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. இச்சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை மேற்கொள்ளப்படுமென சவூதி அரேபியா தெரிவித்திருந்தபோதிலும் அவ்விதம் எதுவித நடவடிக்கையும் இடம்பெறவில்லை. அதன பின்னர் கடந்த மே மாதத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் எதிர்பாராததொன்றல்லவாயினும், அதன் மூலம் சவூதி அரேபிய நாட்டினுள் இயங்கும் மதவாதக் குழுக்களைக் கட்டுப்படுத்துவது அந்த அரசுக்கு இயலாததொரு காரியமாகும் என்பது உறுதியாகியுள்ளது. இவை யாவும் அமெரிக்க அரசுக்குத் தெரிந்துள்ள நிலையிலும், மற்றைய அரேபிய நாடொன்று தொடர்பான நடவடிக்கை போன்று, அமெரிக்காவால் சவூதி அரேபியா விடயத்தில் செயற்படமுடியவில்லை. ஏனெனில், நிர்வாகம் தொடர்பான பலதரப்பட்ட நபர்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள தனிப்பட்ட தொடர்புகளே இதற்கான காரணமாகும். இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த 'றொபேர்ட் பேயர்' "எந்தவொரு வகையிலாவது, சவூதி அரேபியாவில் சுதந்திரமான தேர்தலொன்றின் மூலம் ஜனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் ஏற்படின், பெரும்பான்மை ஆதரவுடன் அப்பதவியை 'பின்லேடனே' கைப்பற்றிக்கொள்வார் அது சவூதி அரேபிய மக்கள் செப்ரெம்பர் 11ஆம் திகதிய சம்பவத்தில் வெளியேறிய இரத்தத்தில் தமது கைகளைக் கழுவிக்கொள்ளும் விருப்பத்தின் காரணமாகவன்றி, பலம்வாய்ந்த அமெரிக்க நாட்டை எதிர்க்க அஞ்சி நாட்டை நிர்வகித்து வரும் திருடர்களுக்கு எதிராகத் தாம் கிளர்ந்தெழுவதை வெளிப்படுத்துவதாக அமையும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

'பேயர்' குறிப்பிடும் வகையில் சவூதி அரேபியாவில் நியாயமற்ற நிர்வாக நடைமுறை தொடர்ந்து பேணப்பட்டு வரவேண்டுமென்பது அமெரிக்கத் தலைவர்களுக்கு தேவையான ஒன்றாகும். உலகச் சந்தையில் எண்ணெய் விலையைத் தீர்மானிக்கும் நாடாகவும் உலகத்திலேயே அதிக எண்ணெயைப் பயன்படுத்தும் அமெரிக்காவுக்கு பெருமளவிலான எண்ணெய் விநியோகத்தை மேற்கொள்ளும் நாடாகவும் சவூதி அரேபியா விளங்குவதால் அந்நாடு எவ்வித மாற்றத்துக்கும் உட்படாது இதே வகையில் நிர்வகிக்கப்பட்டு வரவேண்டுமென்பதே இற்றை வரையான அமெரிக்காவின் கொள்கையாக அமைந்துள்ளது.

## வியேஸ்ரீ

தொடர்ந்தும் இதே நிலைமை மாற்றமெதுவும் இல்லாது நீடித்து நடைமுறைப்படுத்த முடியுமா? ஆகக் குறைந்து பிரித்தானிய விமானசேவை நிறுவனம் சவூதி அரேபியாவுடன் தொடர்பு வைத்துக்கொள்வது ஆபத்தானதென உணர்ந்துள்ளது. அமெரிக்கா, சவூதி அரேபியாவில் உல்லாசப் பயணம் மேற்கொண்டுள்ள தனது நாட்டவர்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. தமது திறமையற்ற நிர்வாகத்தாலும் மற்றும் ஊழல் நடவடிக்கைகளாலும் நலிவடையும நிலையிலுள்ள சவூதி அரேபிய நாட்டின் நிர்வாகத்தை, மாற்றமெதுமின்றி தொடர்ந்தும் நிர்வாகத்தை நடத்திச் செல்ல அனுமதிப்பதாயின் அமெரிக்கா கடும் தியாகம் செய்யவேண்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அது பெரும்பாலும், ஈராக் நாட்டில் ஏற்படும் அனுபவம் போன்றதாயே அமையும். *

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

யாழ். கச்சேரி - நல்லூர் வீதியில் 3 பரப்புக்காணியில் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பரராஜசிங்கம், இல.65, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P. 0777-674920, 01-2599211. (21917)

## போட்டிப்பரீட்சை(SSO)

அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான போட்டிப் பரீட்சைக்குரிய பொது அறிவும் நுண்ணறிவும் என்னும் நூல வெளிவந்துள்ளது. யாழ். பிரபல புத்தக சாலைகளிலும் கொழும்பிலும் பெற்றுக கொள்ளலாம். விலை ரூபா 120. பிரபல ஆசிரியர் கே.கமலதாசன். (21704)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கே.கே.எஸ். வீதி, மல்லாகத்தில் "மணிக்கடை" விற்பனைப் பொருள்கள அடங்கிய பொதி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரத்துடன் பசுபதி கலையரசன், கஸ்தூரியார் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவும். (21913)

## தவறிவிட்டது

மாதகலுக்கும், யாழ்ப்பாணத் திற்கும் இடையில் 61/2 பவுண் நிறையுடைய தங்க நகைகள் அடங்கிய டப்பா ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பி.அந்தோனிப்பிள்ளை, 18/1, கோயில் ஒழுங்கை, நாவாந்துறை எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்). (21906)

## இசைக்குறிப்புகள

ஓகன், வயலின், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் இசைக் குறிப்புகள் பாகம் (1-15) வெளி வந்துள்ளன. தொடர்பு: இல.75, கோவில் வீதி (நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தெற்கே). T.P. 0777 031293 பதிவுத் தபாலிலும் பெறலாம்) (21837)

## திருமணசேவை

எம்மிடம் வெளிநாட்டு ஸ்பொன்சா மணமக்களின் குறிப்புக்களும் உள்நாட்டு ஆசிரியா, எழுதுவினைஞர், வர்த்தகர்கள், டாக்டர்கள், எஞ்சினியர்கள், எக்கவுண்டர்கள் மணமக்களின் குறிப்புக்களும் கத்தோலிக்கரினது தகவல்களும் எம்மிடம் உண்டு. 1.கல்யாண மாலை திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 2.கொழும்பில் கல்யாணமாலை. T.P. 338162, Fax 338161 (21858)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971 இல் பிறந்த சித்திரை நட்சத்திரம், லக்கினத்தில் செவ்வாய் உள்ள, கிரகபாவம் 42, பட்டதாரி ஆசிரியைக்கு அரச தொழில் புரியும், நற்பண்புள்ள மணமகன் தேவை. கனடாவும் விரும்பத்தக்கது. ஜாதகத்துடன் தொடர்பு: விள.இல. 2003, மே/பா உதயன். (21900)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, யாழ்ப்பாணத்தில் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றில் முக்கிய பதவி வகிக்கும், 33வயதுடைய செவ்வாய்க் குற்றமற்ற மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விள.இல. 2004, மே/பா உதயன். (21905)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர்கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (ஓ-10)

---

உ

ஓம் சக்தி

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம!

# பூப்புப் புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வ மங்களகரமான சுபானு வருடம் ஆவணித்திங்கள் 12ஆம் நாள் நாளை (29.08.2003) வெள்ளிக்கிழமை பகல் 12.12 மணிமுதல் 1.00 மணிவரை வரும் உத்தர நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபவேளையில்,

## எமது புத்திரி திருவளர் செல்வி
## நிந்துஜா அவர்களுக்கு

பூப்புப் புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

☛ தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி. இ.பிரபாகரன் - நகுலேஸ்வரி
குடும்பத்தினர்.
(பிரபா - ராணி)

*47/1, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
(21904) (25-21-15-18)

---

# வெளிக்கள உத்தியோகத்தர் சமூகத்தின் வாழ்த்துக்கள்



சுன்னாகம் வர்த்தக சங்கத் தலைவரும்,
யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர் சங்கங்களின்
சம்மேளனப் பொருளாளரும்,
ஓய்வுபெற்ற வெளிக்கள உத்தியோகத்தரும்,
சுன்னாகம் சண்ராஜ் கொம்பிளக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரும்,
பிரபல சமூக சேவையாளருமாகிய

உயர்திரு.

## நடராசா சண்முகவேல்

அவர்கள் மல்லாகம் மாவட்ட நீதிபதி
திருமதி S.இளங்கோவன முன்னிலையில் 30.06.2003 இல்
அகில இலங்கை சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம்
செய்து கொண்டமையையிட்டு நாம் மிகவும் மகிழ்வுறுவதோடு,
அவரது பணி மேன்மேலும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல
இறைவனைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

வெளிக்கள உத்தியோகத்தர்
சமூகம்

*138, கே.கே.எஸ்.வீதி,*
*சுன்னாகம்.*
(21911)(21-15-18

---

# 4ஆவது வருட
# நெஞ்சை விட்டு நீங்காத துன்பச் சுமைகள்



தோற்றம்:
07.01.1977

மறைவு:
10.09.1999

நினைவு நாள்
28.08.03

## செல்வன் குணசிங்கம் ஞானேந்திரன்

கண்மணி போன்ற ஞானேந்திரனே~நீ
விண்ணுலகடைந்த விந்தை தான் என்னே!
மனிதரில் மாணிக்கமாய்த் திகழ்ந்தவனே கண்ணா!
மனதினிலே மணிவிளக்காய் ஒளிர்ந்தவனே!
மணவாழ்வில் மகிழ்ந்திருப்பாய் எனக் காத்திருந்தோம்~நீயோ
கணப்பொழுதில் சொல்லாமலே போய்விட்டாயே!
கந்தனையே கரங்குவித்து வணங்கி வழிபட்டு
சிந்தனையிலே நல்ல சிறப்பான எண்ணங்களுடனே
உந்தனையே நாம் வளர்த்தோம் உத்தமனாய்!
மகிழ்ச்சிப் பூங்காவாய் பூத்துக் குலுங்க வேண்டிய நீ
கவர்ச்சிப் பூங்காவன நாளிலே கண்மூடி மௌனியானாய்!~அந்தப்
பொல்லாத காலன் உன் பூப்போன்ற இன்னுயிரை
சொல்லாமற் கொள்ளாமல் பறித்தே சென்றிட்டான்!
இன்னும் உனது சிரிப்பொலி நம் காதுகளில் கணீரென்று கேட்கிறதே
மின்னும் உன் பூமுகத்தை இனி எப்போது நாம் காண்போம்?
எம் இல்லம் ஒளியின்றி இருளாகிப் போய் விட்டதே!
ஓம் சாந்தி!

எப்போதும் உன்னையே நினைந்து ஏங்கும்
அப்பா, அம்மா, அக்கா, தங்கை, அம்மம்மா, அத்தான், மருமகள் உறவினர்கள்.

UTHAYAN Graphics

C/29778

## அமரர் குணசிங்கம் ஞானேந்திரன் (கண்ணன்)

உரிமையாளர்: கோபிகா ஆடையகம், யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 - 10 - 1955



மறைவு 28 - 08 - 2002

## அமரர் பொன்னையா மிருகண்டர்

(வருமான மேற்பார்வையாளர் நகர சபை, சாவகச்சேரி)

ஆண்டுகள் ஒன்றல்ல பல ஆனாலும்
ஆறாத உம் நினைவுகள்.
ஆறாத் துயரில் எமை ஆழ்த்தி
ஆண்டவன் அடி சேர்ந்தீரே!

—குடும்பத்தினர்.

பெரியபளை, பளை. (சி-29813)(21-15-19)


# இசைக் கருவிகள்



சகலவிதமான
இசைக்கருவிகளையும்,
அவற்றின் உதிரிப்பாகங்களையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
அவற்றை உத்தரவாதத்துடன்
திருத்திக் கொள்ள
நாடுங்கள்.

## சாயி சங்கீதா

UG53, பீபள்ஸ் பார்க், கேஸ்வேர்க் வீதி,
கொழும்பு - 11. தொலைபேசி: 2384222, 2445102
பக்ஸ்: 2445102 ஈ-மெயில்: saimusic@sltnet.lk

Talent Media - 2079475


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 503 |
| திகதி | 26.08.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4145240-4161835

வெற்றி இலக்கங்கள் **05 14 22 37**

லக்கினம்

இடபம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,776,500/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,602,900/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 370,124 | 10 | 3,701,240 |
| 2 இலக்கங்கள் | 33,956 | 20 | 679,120 |
| 1 இல + லக்கினம் | 33,548 | 30 | 1,006,440 |
| 2 இல + லக்கினம் | 3,119 | 100 | 311,900 |
| 3 இலக்கங்கள் | 907 | 500 | 453,500 |
| 3 இல + லக்கினம் | 82 | 5,000 | 410,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,776,500 | - |
| மொத்தம் | 441,741 | - | 7,062,200 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா.7,062,200/-

தொடர் இல. 5143849க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 29ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்


4147720-3-56
4147562-5-17
4153333-3-61
4152250-4-10
4147462-8-74

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

நல்லைக் கந்தனின் "பூங்காவனம்"

# திருக்கல்யாண நன்னாளில்

இன்று எமது வாடிக்கையாளர்களுக்கு
கந்தனின் அருள் கிடைக்க பிரார்த்திக்கிறோம்.

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

UTHAYAN Graphics

(C/29814)

# யாழ். சுகாதாரப் பிராந்தியத்தில் மருத்துவமனைகளுக்கு கட்டடங்கள்

சண்டிலிப்பாய்,ஓக.28

'நீரப்' திட்டத்தின்கீழ் யாழ். சுகாதார பிராந்திய பிரிவில் புதிய கட்டடங்கள் நிறுவப்படவுள்ளன.

தற்போது கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இயங்கிவரும் இடம்பெயர்ந்த வைத்தியசாலையான காங்கேசன்துறை (மயிலிட்டி) மார்பு நோய் வைத்தியசாலைக்கு யாழ். பண்ணையில் நிரந்தரக் கட்டம் நிறுவப் படவுள்ளது. முன்னர் பண்ணையில் இயங்கிவந்ததும் தற்போது யாழ். போதனாவைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள மணிக்கூட்டு வீதியில் செயற்பட்டு வருவதுமான மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்கு முன்னர் இயங்கிய பண்ணையில் புதிய கட்டடம் நிறுவப்படவுள்ளது.

இதேவேளை, தற்போது சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனையின் மாடிக் கட்டடத்தில் ஒரு பகுதியில் செயற்பட்டுவரும் யாழ். சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியத்திற்கும் பண்ணைப் பகுதியில் நிரந்தரக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் அவ்விடத்திலேயே மாவட்ட மருந்துக்களஞ்சியம் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் நிர்வாக கட்டடம் ஒன்றும் நிறுவப்படவுள்ளது. நீண்ட காலமாக தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் சுன்னாகம் அரசினர் மத்திய மருந்தகம், புத்தூர் அரசினர் மத்திய மருந்தகம் ஆகியவற்றிற்கும் நிரந்தரக் கட்டடங்கள் நிறுவப்படவுள்ளன.

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதம் இத்தகவல்களைத் தெரிவித்தார். இத்திட்டத்திற்கான நிதி 'நீரப்' (Neerp) திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-135)

# கிணறுகள் புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஓக.28

பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனப் பிரிவில் விவசாய கிணறுகளை புனரமைத்துக் கொடுக்கும் கெயர்நிறுவனத் திட்டத்தின் கீழ் ஐந்து கிணறுகள் புனரமைக்கப்படவுள்ளன. விவசாயிகள் பங்காகப் பயன்படுத்தி வரும் ஐந்து கிணறுகள் இதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாக இருப்பதாகவும் பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் ச.செல்வரத்தினம் தெரிவித்தார். (ஓ-135)

# மோதலில் ஈடுபட்ட குழு வரணியில் கைது!

பருத்தித்துறைப் பகுதியில் மோதலில் ஈடுபட்டு விட்டுத் தப்பியோடி வந்த இளைஞர் குழுவொன்று படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வரணிப் பகுதியில் வைத்து மாசேரி, சாளம்பை இராணுவத்தினரால் இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

குருநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுவொன்று குறிப்பிட்ட தினத்தன்று பருத்தித்துறைக்குச் சென்று அங்கு மோதலில் ஈடுபட்டது. பின்னர் குடத்தனை 6 ஆம் கட்டையூடாக வந்து கொண்டிருந்தவேளை அவர்கள் வந்த வாகனம் எரிபொருள் தீர்ந்து விட்டதால் வழியில் நின்றுவிட்டது. ஆனால், வாகனத்தை தள்ளிக் கொண்டு அக்குழுவந்தது.

இதனை அவதானித்த படையினர், இளைஞர் குழுவை மறித்து விசாரணைகளை மேற்கொண்டனர். இதன் போது தாம் மோதலில் ஈடுபட்டதை அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்த விசாரணை சுமார் 3 மணிநேரம் இடம்பெற்றுள்ளது.

படையினர் இதுபற்றி பருத்தித்துறை பொலீஸாருக்கு அறிவித்ததை அடுத்து வாகனத்தின் சாரதி உட்பட 10 இளைஞர்களையும் பொலீஸார் அழைத்துச்சென்றனர். (ஓ-10-170)

# நல்லூர் ஆலயச் சுற்றாடலில் கண்டெடுக்கப்பட்ட அ.அட்டைகள்

நல்லூர் ஆலயச் சூழலில் தவற விடப்பட்ட அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு ஆலயமுன்றிலிலுள்ள உற்சவகால சிறப்புச் செயலணியின் பணிமனையிலும், இந்து வட்டுதியிலுள்ள உற்சவகால பணிமனையிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவற்றை உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறப்புச் செயலணி பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட அடையாள அட்டைகள்:- மதியாபரணம் இராசையா (அளவெட்டி), கந்தசாமி இறஸ்குமார் (நீர்வேலி மத்தி), முருகையா நாகபூசணி (அளவெட்டி வடக்கு), மகாலிங்கம் பாலச்சந்திரன் (இணுவில்), செல்வநாதன் சுதாஜினி (டச்வீதி, மானிப்பாய்), செல்லத்துரை காந்தினி (சுன்னாகம்), செல்லத்தம்பி செல்வராணி (அளவெட்டி).

இந்து விடுதியிலுள்ள உற்சவ கால பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ள அடையாள அட்டைகள்:- பொன்னுத்துரை ரஞ்சனா (கச்சாய் வீதி, கொடிகாமம்), ராஜேஸ்வரி சின்னத்தம்பி (ஏழாலை), நாகேந்திரன் கவிதா (கரவெட்டி), ஜெபதாஸ் ஜெயந்தினி (கைதடி வடக்கு), சின்னப்பிள்ளை பாக்கிய லட்சுமி (வட்டுக்கோட்டை கிழக்கு), அமிர்தகௌரி சிதம்பரநாதன் (அல்வாய் வடக்கு), பஞ்சாட்சரம் புவனசாந்தம் (சாவகச்சேரி) (ஓ-5)

வித்தியா கல்வி நிலையம்
கண்டி வீதி, சாவகச்சேரி
(பிரதேச செயலகம் முன்பாக)
தென்மராட்சி மாணவர்களின் வசதிகருதி G.A.Q, B.A. Part I,II வகுப்புக்கள், 30.08.2003
காலை 8மணிக்கு ஆரம்பம்.
G.C.E O/L
G.C.E A/L (கலை 2004)
துரித மீட்டல் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
தொலைபேசி 0777-770247 (21922)
தொடர்பு திரு. க. தர்மராஜா

# சாயி சிந்தனை

## சமுதாய சேவை



சமுதாயத்தில் இறங்கி சேவை செய்யுங்கள். பல உபதேசங்கள் செய்வதைவிட, ஒரு சிறு நடைமுறை மிகவும் சிறந்தது. குறைவாகப் பேசுங்கள். நிறைய சேவை செய்யுங்கள். இதனால்தான் நாடு முன்னேறும். தற்போது மக்களின் ஆசைகள் அளவுக்கு மிஞ்சி இருக்கின்றன. ஆகவே, மனச்சாட்சியுடன் செயல்படுங்கள். மனச்சாட்சிதான் கடவுள். அதுதான் உங்கள் செயல்கள் அனைத்துக்கும் கண்கூடான சாட்சி. கடவுள் உங்கள் செயல்களைக் கவனித்து, உங்கள் எதிர்காலத்தை ரகசியமாக எழுதுகிறார். ஆகையால் சேவை செய்து இறைவனைத் திருப்திப்படுத்துங்கள். நாம் தெய்வீகத்திலிருந்து பிறந்து வந்தோம். நம்முடைய கடமை அதே தெய்வீகத்துடன் இணைவதுதான். கடவுள் எப்போதும் கொடுப்பவர். எதையும் பெற்றுக்கொள்பவர் இல்லை. செய்யும் செயலுக்குப் பிரதிபலன்கள் எதிர்பார்ப்பது வெறும் வியாபாரம். ஆன்மீகம் எப்போதும் அப்படி வியாபாரமாகத்தான் இருக்கிறது. அன்பை வளர்த்துக் கொள்ளுங்கள். நான் முதலில் மனிதன் என்பதை உறுதியாக நம்புங்கள். மனிதனாக இருந்து, தெய்வீக நிலைக்கு உயர முயற்சி செய்யுங்கள். இறைவன் பெருமைகளைப் பாடுவதன் மூலம், பேசுவதன் மூலம் இது சாத்தியமாக வாய்ப்பிருக்கிறது.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*





அரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்
53,500இல் இருந்து
40GB HDD, 15" Monitor, 64MB VGA, 128 MB RAM, FDD, 56X CDRom, Sound System, Keyboard, Mouse
3Years Warranty & Service
Free Internet connection
இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே
கணனி, கணனிசார் உபகரணங்கள் திருத்துதல்
Repair திருத்துதல்
★மொனிட்டர்,
★ஸ்கானர்
★PowerUnits
★பிரிண்டர்
★UPS
★CPU
அனைத்துத் திருத்தங்களுக்கும் உத்தரவாதம் உண்டு.
உங்கள் உபகரணங்கள் பரிசோதிக்கப்பட்டு திருத்துவதற்குரிய கூறுவிலை (Quotation) எம்மால் தரப்படும்.
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம்: 173/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5893
வெள்ளவத்தை: 15, 36Th Lane COLOMBO -6 TP: 074-516764
கொட்டாஞ்சேனை: 82, New Chetty Street COLOMBO-13. T.P: 074-619673



இதோ! மீண்டும் உதயமாகின்றது!
லைடன்
அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையம்



இன்று 28.08.03 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னைய நிர்வாகத்தின் கீழ் ஆரம்பமாகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
அன்னை வேளாங்கண்ணி மாதாவின் அருட் பார்வை கலந்த பரிந்துரையுடன் உங்கள் தேவையைப்பூர்த்தி செய்து சேவையை வழங்குகின்றது.
நல்ல தரமானதும் நியாய விலையிலுமான அழகு சாதனப் பொருள்களுக்கு நாடுங்கள்:
லைடன் அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையம்
D.V.ராஜரட்ணம்
31A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாசத்தின் உறைவிடமான

**ஆறுமுகம் பொன்னுத்துரை**

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உறவினர்.

சங்கானை. (21925) (26-21-19-13)

## மரண அறிவித்தல்

**ஆறுமுகம் பொன்னுத்துரை**

(முன்னாள் நாடகக் கலைஞர், பிரபல வர்த்தகர்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னுத்துரை அவர்கள் நேற்று (27.08.2003) புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் அன்பு மகனும் கண்மணியின் அன்புக் கணவரும் வில்வராசா, சறோஜாதேவி (ஜேர்மனி), தற்பராதேவி, சசிகலா (லண்டன்), தர்மராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் சுசீலாதேவி, பாலசிங்கம் (ஜேர்மனி), ஜெயக்குமார், மயூரவரதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிருபன், சுஜீவன், நிரோஜன் (ஜேர்மனி), நிசாந்தி (ஜேர்மனி), நிதர்சன் (ஜேர்மனி), கிருசா, அலோசன், நிவேதன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.* (21924) (32-21-19-)

தகவல்: மகன் - வில்வராசா.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணி மாதம் 12ஆம் நாள் நாளை (29-08-2003) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் 1.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி இளையதம்பி தம்பதிகளின் புதல்வன் திருநிறை செல்வன் **பிறேமதாஸ் (சிறி)** அவர்களுக்கும்



திரு.திருமதி விஜயகுமாரின் சகோதரி திருநிறை செல்வி **வினோதினி (வினோ)** அவர்களுக்கும்

அருள்மிகு நல்லூர் சிவன் ஆலயத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தும், அதனைத் தொடர்ந்து, மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் 30-08-2003 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி இளையதம்பி தம்பதி
42, நாயன்மார் வீதி,
நல்லூர்.

திரு.திருமதி விஜயகுமார் தம்பதி
ஆடியபாதம் வீதி.
கல்வியங்காடு.

(19615)

*(இரு வீட்டார் அழைப்பு)*